# அம்புலியிலிருந்து வீரர்கள் புறப்பட்டனர்

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 281
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒருவருடம் — ரூ. 66-00

யாழ்ப்பாணம் கார்த்திகை 6 றம்ழான் 10 வெள்ளிக்கிழமை [21-11-69]

# இராமநாதன்பல்கலைக்கழகம்?

# அடுத்த ஆண்டில் உருவாகும

## தமிழ்க் காங்கிரஸ் வட்டாரம் நம்பிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

**இராமநாதன் பல்கலைக்கழகம் அடுத்தவருடம் பெப்ரவரி மாதம் நடுப்பகுதியில் நிறுவப்படுமெனத் தமிழ்க்காங்கிரஸ் வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.**

தற்பொழுதுள்ள பல்கலைக் கழகங்களில் உள்ள நெருக்கடியைத் தீர்ப்பதற்காக புதிய ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவவேண்டிய அவசியத்தை அரசாங்கமும்உணர்ந்துள்ளதாகத் தெரியவருகிறது.

தமிழ் மக்களுக்கென ஒரு பல்கலைக்கழகம் நிறுவவேண்டும் என்ற கோரிக்கையில் இரு தமிழ்க்கட்சிகளுக்குமிடையிலிருந்த வேற்றுமை குறைந்திருப்பதாகவும் பல்கலைக்கழகத்தின் பெயர் பற்றிய பிரச்னை அநேகமாகத் தீர்ந்துவிட்டதாகவும் எந்த இடத்தில் பல்கலைக் கழகத்தை நிறுவுவதென்ற பிரச்னைதான் தற்பொழுது இருப்பதாகவும் தெரியவருகிறது.

இராமநாதன் பல்கலைக் கழகம் நிறுவுவதற்காக திருமதி பண்டாரநாயக்காவின் கூட்டரசாங்கமும், பிரதமர் டட்லி சேனநாயக்காவின் தேசிய அரசாங்கமும் வரவு செலவுத்திட்டத்தில் ஒவ்வொரு வருடமும் அடையாள மான்யமாக 10 ரூபா ஒதுக்கிவந்துள்ளன.

# சேர் இராமநாதன் தபால் தலை

## சுவீப்முடிவுகள்

கொழும்பு, வியாழன் இன்று இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
24 S 0626 ரூ. 91 540

இரண்டாவது பரிசு
07 N 0090 ரூ 36,615

மூன்றாவது பரிசு
29 D 0895 ரூ. 9,154

தலா ரூ. 457 ச. 70 பரிசு பெறும் 100 டிக்கெட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 02 A 0654 | 21 A 0967 |
| 06 B 0896 | 12 B 0160 |
| 17 B 0155 | 37 B 0378 |
| 35 B 0944 | 25 B 0098 |
| 30 C 0903 | 27 C 0278 |
| 18 C 0496 | 31 C 0797 |
| 33 D 0[illegible] | [illegible] |
| 21 D 05[illegible] | [illegible] |
| 21 D 0081 | 27 D 0833 |
| [illegible] | [illegible] |

| | |
|---|---|
| 32 L 0277 | 18 M 0278 |
| 05 M 0728 | 06 M 0943 |
| 11 N 0748 | 09 N 0376 |
| 13 O 0412 | 23 O 0638 |
| 01 O 0988 | 04 O 0534 |
| 20 O 0222 | 02 O 0187 |
| 32 P 0168 | 12 P 0635 |
| 37 P 0613 | 09 Q 0177 |
| 04 Q 0699 | 05 R 0337 |
| 06 R 0585 | 02 R 0096 |
| 18 R 0350 | 24 S 0503 |
| 23 S 0273 | 31 S 0232 |
| 22 S 0610 | 22 T 0891 |
| 21 T 0523 | |
| 12 T 0490 | 10 T 0286 |
| 18 U 0215 | 12 U 0175 |
| 19 U 0445 | 02 V 0132 |
| 07 V 0310 | 01 V 0260 |
| 28 W 0338 | 11 W 0697 |
| 08 W 0459 | 11 W 0050 |
| 20 W 0126 | 31 X 0646 |
| 32 X 0702 | 32 X 0113 |
| 08 X 0163 | 15 X 0678 |

## சர்வேயர்-3 பாகங்கள் பூமிக்கு வருகிறது

### சந்திரபயணத்தின் 2-வது வெற்றி

ஹுஸ்டன், நவ. 21

**மனிதவர்க்கத்தின் மூன்றாவது, நான்காவது பிரதிநிதிகளாக அம்புலியில் காலடி எடுத்துவைத்து வியத்தகு சாதனைகளை உலக வரலாற்றில் மீண்டும் நிலைநாட்டிய அப்பல்லோ 12வீரர்களான சார்ல்ஸ் கொன்ராட்டும், அலன்பீனும் நிலாத்தரைக்கு விடை கூறிவிட்டு நிலாவாகனத்தில் புறப்பட்டு பூமிக்கு திரும்புவதற்காகதாய்க் கலத்துடன் இணைந்து கொண்டனர்.**


திட்டமிட்டதற்கு 4 நிமிடங்களுக்குப் பின்னர் (இலங்கை நேரப்படி சரியாக 7-57 மணிக்கு) இன்டபிட் என்ற நிலாவாகனத்தில் சந்திரனிலிருந்து புறப்பட்ட வீரர்கள் இருவரும் சரியாக 11-32 மணிக்கு ரிச்சாட் கோர்டன் அம்புலியை வலம்வந்து கொண்டிருந்த தாய்கலத்துடன் சேர்ந்து கொண்டனர்.

சந்திரனிலிருந்து புறப்பட்ட 'இன்டபிட்' யங்கிகிளிப்பர் என்ற தாய்க் கப்பலுடன் இணையமுன்னர் சந்திரனைச் சுற்றிய பாதையில் 'அதிவேகமாகச் சென்றுகொண்டிருந்துவிட்டு இரவு 11-32 மணிக்கு தாய்க்கலத்துடன் இணைந்துகொண்டது.மீண்டும்சந்திரனைச்சுற்றிய பாதையில் சென்றுகொண்டிருக்கும் தாய்க்கலம் நாளை சனிக்கிழமைபிற்பகல்பூமியைநோக்கிய பாதையில் விரையும்.

அழகிய மங்கையின் வதனமாக உலக மக்களை மகிழ்வித்துக்கொண்டிருந்த அம்புலியில் ஒரு தடவையல்ல, இரு தடவைகள் மனிதன் காலடி எடுத்து வைத்துவிட்டான். மனித வர்க்கத்தின் காற்றே படாமலிருந்த அம்புலித்தரையில் அப்பல்லோ-11 வீரர்களான ஆம்ஸ்ரோங் எட்ஊன் ஆல்டிரின் ஆகிய இருவரது காலடிகளுக்குப் பின்னர் அப்பல்லோ-12 வீரர்கள் அப்புகழைத் தட்டிக்கொண்டனர்.



அரை மணி முன்னதாகவே தரையில் இறங்குவதற்கு அவர்கள் அனுமதி கேட்டார்களாம். அனுமதிகிடை



மல் இருந்ததாம் ஆனல் தூபடிந்து காணப்பட்டது வெள்ளைநிறமான சர்வயர்-3 பழுப்பு நிறமுற்றிருந்தது அதிலிருந்த பாகங்களையும் டெலிவிஷன் கருவியையும் அவர்கள் கழற்றி எடுத்துக் கொண்டார்கள். பள்ளம் ஒன்றின் அருகில் அவர்கள் படம் எடுத்தபொழுது தரை வழுக்கிவிடக்கூடும் என்று கட்டுப்பாட்டதிகாரிகள் எச்சரிக்கை விடுத்தார்கள்.

இரவு 11-10மணியளவில் அதாவது தாய்க்கலத்துடன் சந்திரக்கலம் இணைவதற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியத்தை அரசாங்கமும்உண ர்ந்துள்ளதாகத் தெரியவரு கிறது.

தமிழ் மக்களுக்கென ஒரு பல்கலைக்கழகம் நிறுவவேண் டும் என்ற கோரிக்கையில் தீர்ந்துவிட்டதாகவும் எந்த இடத்தில் பல்கலைக் கழ கத்தை நிறுவுவதென்ற பிர ச்னைதான் தற்பொழுது இரு ப்பதாகவும் தெரியவரு கிறது.

தேசிய அரசாங்கமும் வரவு செலவுத்திட்டத்தில் ஒவ் வொரு வருடமும் அடை யாள மான்யமாக 10 ரூபா ஒதுக்கிவந்துள்ளன.

# சேர் இராமநாதன் தபால் தலை அடுத்த வருடம் வெளிவரும்

யாழ்ப்பாணம், வெள்ளி

சேர் பொன்னம்பலம்இராம நாதனின் உருவப்படத்தை கொண்ட 30 சத விசேஷ முத்திரையொன்று அடுத்த வருடம் பெப்ரவரி மாதத் தில் வெளியிடப்படவிருக் கிறது. தேசியவீரர்கள் என்ற பிரிவின் கீழ் இம் முத்திரை வெளியிடப்படும். இத்துடன் சேர் ஜேம்ஸ் பீரிஸ் உருவப்படத்தைக் கொண்ட 20 சத விசேஷ முத்திரையும் டபிள்யு. ஏ டி சில்வாவின் உருவப்படத் தைக்கொண்ட 35 சத விசேஷமுத்திரையும் வெளி யிடப்படும்.

யாழ்ப்பாணம் 'பிலரலிக்' சேவையைச் சேர்ந்த திரு. எஸ் எஸ் முத்துக்குமாரு மேற்கண்ட தகவலைத் தெரி வித்தார். 1970-ம் ஆண்டு வெளியிடுவதற்கான முத் திரைகளின் பட்டியலை அர சாங்கம் வெளியிட்டிருப்ப தாகவும் அதில் ஆறுமுக நாவலரின் முத்திரைபற்றி எதுவும் குறிப்பிடவில்லை யென்றும் அவர் கூறினார்.

1970-ம் ஆண்டு வெளி யிடப்படவிருக்கும் முத்தி ரைகள் பற்றிய விபரம் வரு மாறு:-

1970-ம் ஆண்டு ஜனவரி மாதம் 'வனவிலங்கினம்' நடைமுறை முத்திரை யொன்று 4 சதத்திற்கு வெளியிடப்படும்

1970-ம் ஆண்டு தேசிய வீரர்கள் பிரிவின் கீழ் சேர் பி. இராமநாதன், சேர் ஜேம்ஸ் பீரிஸ், டபிள்யு. ஏ. டி. சில்வா ஆகியோரின் முத்திரை வெளியிடப்படும்

சர்வதேச 'எக்ஸ்போர்' பொருட்காட்சியையொட்டி 70-ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ரூபா, 2 ரூபா, 25 சதங் களைக் கொண்ட மூன்று விசேஷ முத்திரைகள் வெளி யிடப்படும். 70-ம் ஆண்டு மே மாதம்சர்வதேச தபால் சங்கப் புதிய கட்டடத் திறப்பு விழா முத்திரை யாக 50 சத விசேஷ முத் திரையொன்று வெளியிடப் படும்.

70-ம் ஆண்டு ஜூன் மாதம் ஆசிய உணவு உற் பத்தி வருடத்தைக் குறிக் கும் 60 சத விசேஷ முத் திரை வெளியிடப்படும்.

70-ம் ஆண்டு ஜூலை மாதம் மருத்துவப்பகுதி நூற்றாண்டு முத்திரைகளாக 5 சதத்திலும், 45 சதத்தி லும் இரு விசேஷ முத்திரை கள் வெளியிடப்படும்.

70-ம் ஆண்டு செப்டம்பர் 28-ம்திகதிகெப்படிட்பொல ஞாபகார்த்த விசேஷ முத் திரையொன்று வெளியிடப் படும்.

70-ம் ஆண்டு அக்டோபர் 24-ம் திகதி ஐக்கிய நாடுகள் வருடத்தையொட்டிவிசேஷ முத்திரையொன்று வெளி யிடப்படும்.

### 6 அமைச்சர்கள் ராஜினாமா

புதுடில்லி, நவ 19

உத்தரபிரதேசத்தில் 6 காங்கிரஸ் மந்திரிகள் இன்று ராஜினாமாச் செய்துள்ள னர். இவர்களது ராஜினாமா கவர்னருக்கு அனுப்பிவைக் கப்பட்டுள்ளதாக முதல் மந் திரி கூறினார்.

மேலும் சில அமைச்சர் கள் ராஜினாமா செய்யக் கூடுமென எதிர்பார்க்கப் படுவதாக ராஜினாமா செய் துள்ள அமைச்சர்கள் தெரி வித்துள்ளனர்.

வருமாறு:

| | |
|---|---|
| 02 A 0654 | 21 A 0967 |
| 06 B 0896 | 12 B 0160 |
| 17 B 0155 | 37 B 0378 |
| 35 B 0944 | 25 B 0098 |
| 30 C 0903 | 27 C 0278 |
| 18 C 0496 | 31 C 0797 |
| 33 D 0399 | 27 D 0642 |
| 21 D 0540 | 08 D 0199 |
| 21 D 0081 | 27 D 0833 |
| 35 E 0104 | 07 E 0071 |
| 14 E 0554 | 19 F 0950 |
| 04 F 0966 | 25 F 0530 |
| 37 F 0342 | 17 G 0517 |
| 08 G 0452 | 12 H 0860 |
| 37 J 0747 | 37 J 0209 |
| 21 J 0206 | 26 J 0863 |
| 36 K 0918 | 16 K 0212 |
| 02 K 0407 | 37 K 0136 |
| 19 K 0998 | 27 L 0489 |
| 10 L 0319 | 09 L 0137 |

21 T 0523

| | |
|---|---|
| 12 T 0490 | 10 T 0286 |
| 18 U 0215 | 12 U 0175 |
| 19 U 0445 | 02 V 0132 |
| 07 V 0310 | 01 V 0260 |
| 28 W 0338 | 11 W 0697 |
| 08 W 0459 | 11 W 0050 |
| 20 W 0126 | 31 X 0646 |
| 32 X 0702 | 32 X 0113 |
| 08 X 0163 | 15 X 0678 |
| 37 X 0620 | 08 X 0649 |
| 17 X 0192 | 15 X 0531 |
| 35 Y 0659 | 18 Y 0637 |
| 18 Y 0888 | 29 Y 0739 |
| 22 Z 0463 | 05 Z 0931 |
| 15 Z 0754 | 13 Z 0386 |
| 30 Z 0832 | 31 Z 0163 |

04 Z 0754

(இவையாவும் உறுதிப் படுத்தப்படவேண்டியவை.)

பல்லவராயன் கட்டு குடியேற்றம்:

## திருத்தப்படாத காணிகள் ரத்துச்செய்யப்பட்டன

புத்தூர், வியாழன்

பல்லவராயன்கட்டு குடி யேற்றத்திட்டத்தில் 1963, 1965, 1967-ம் ஆண்டுகளில் வழங்கப்பட்டு இதுவரை முற்றாகத் திருத்தப்படாத காணிகள் அனைத்தும் ரத் துச்செய்யப்பட்டுள்ளன.

குடியேறுமல் உள்ள காணி களும் ரத்துச்செய்யப்பட் டுள்ளன. மேட்டுக்காணி பள்ளக்காணி ஆகிய இரண் டில் ஒன்றுமாத்திரம் துப் பரவு செய்யப்பட்டிருந் தால் இக்காணிச் சொந்தக் காரர்களுக்கு வருகிற ஜன வரி மாதம் வரை காணிகளை திருத்துவதற்கு அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளதாக காணி அபிவிருத்தி உத்தி யோகத்தர் திரு. பொன்னம் பலம் தெரிவித்தார். இது பற்றிய விசாரணை ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றதென் றும் அடுத்தமாதம் 14-ம் திகதி இதுசம்பந்தமாக இன் னுமோர் விசாரணை நடை பெறுமென்றும் அவர் தெரி வித்தார்.

மேட்டுக்காணிகளை முற்றா கத் திருத்தியோருக்கு தென்னை, பலா, மா மற்றும் பல மரங்கள் இந்தவாரம் இலவசமாக வழங்கப்பட வுள்ளது.

## மண்டைதீவுகொலை வழக்கு; இரண்டாம் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், வெள்ளி

மண்டைதீவு கொலை வழக் கில் 2-ம்எதிரியான கணநாத பிள்ளை விசாரணை நடுவில் விடுதலை செய்யப்பட்டார். இவ்வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் ஜனுப் எம். ஜாமில் முன்னிலையில் விசா ரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் மண்டைதீ வில் சேதுப்பிள்ளை அல்லது செல்லன் என்பவரை இரத் தினம், கணநாதபிள்ளை ஆகிய இருவரும் கொலை செய்த தாக குற்றம் காட்டப்பட் டுள்ளது

1-ம்எதிரிசார்பில் வழக்க றிஞர் ஆர். விஸ்வநாதனும், 2-ம்எதிரிசார்பில் வழக்கறி ஞர் ஏ அன்ரனியும் ஆஜரா ஞர் பொலிஸ்தரப்பில் வழக் கறிஞர் ஜிம்மி ராசரத்தினம் ஆஜரானார்.

2-ம்எதிரிசார்பில் ஆஜ ரான வழக்கறிஞர் திரு. அன் ரனி வாதாடியதை தொடர் ந்து மாஜிஸ்திரேட் 2-ம்எதி ரியை விடுதலை செய்தார். மேல்விசாரணை இம்மாதம் 24-ம்தேதிக்கு ஒத்திபோடப் பட்டுள்ளது.

சுங்கப்பகுதி கொள்ளை

# மூன்ருவது சந்தேகநபர் அடையாளம் காட்டப்பட்டார்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் சுங்கப் பகு திக் கொள்ளை சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் மற் ருெரு நபர் கைது செய்யப் பட்டு ரிமாண்டில் வைக்கப் பட்டுள்ளார், இம்மாதம் 24ம் தேதி இவரின் அடை யாள அணிவகுப்பு நடை பெறும்.

யாழ்ப்பாணம் பதில் மாஜிஸ்திரேட் திரு எஸ். கனகரத்தினம் முன்னிலையில் நடந்த அடையாள அணி வகுப்பில்மூன்ருவது சந்தேக நபரான தயானந்தாவை சுங்கப்பகுதி காவலாளி பொன்சேகா அடையாளம் காட்டினர். ஏற்கனவே முத லாவது சந்தேக நபரான தர்மதாசாவும் 2வது சந் தேக நபரான ரஞ்சித பெரேராவும் அடையாள அணிவகுப்பில் அடையா ளம் காட்டப்பட்டனர்.

மூன்ருவது சந்தேகநப ரான தயானந்தா இம்மா தம் 9ந் தேதி பேலியா கொடையில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபர்கள் மூவரும் தலா 1500 ரூபா பிணையில் செல்ல மாஜிஸ்திரேட்டினல் அனுமதிக்கப்பட்டார். சந் தேகநபர் சார்பில் வழக் கறிஞர் ஏ. அன்ரனி ஆஜ ரானர்.

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ் வரன் ஆலயத்தில் சுக்கிர வாரமாகிய இன்று மாலை 5-45 மணிக்கு பிரதோஷ உற்சவமும் மாலை 6 மணி முதல் இரவு 7 மணிவரை வித்துவான் க. சி. நடரா ஜன் அவர்களால் பெரிய புராண விரிவுரைத் தொட ரில் 'மலர்பணி செய்தவ ரும் உருத்திரம் ஓதியவரும்' என்ற பொருள் பற்றிய கதாப்பிரசங்கமும் இரவு 7-30மணிக்கு சுக்கிரவார அம்மன் பூஜையும் நிகழும்

## ஆசனங்கள் இல்லாதபஸ்கள்

வல்வெட்டித்துறை, வியா.

நேற்று பருத்தித்துறை-நெல்லியடிக்கு ஊடாக யாழ்ப்பாணம் வந்து சேர் ந்த 7 மணி எக்ஸ்பிரஸ் பஸ் வண்டியில் குடைபிடித்த படியே பிரயாணஞ் செய்ய வேண்டியிருந்ததாம் அழுக் குப்படிந்ததும், மெத்தையில் லாத ஆசனங்களுடனும் பிர யாணிகள் பிரயாணம்செய்ய வேண்டிய நிலையில் இங்கு சேவையில் ஈடுபடும் பஸ்கள் இருக்கின்றனவாம். இது பற்றி மேலதிகாரிகளுக்கு புகார் தெரிவிக்கப்பட் டுள்ளது.

11 வீரர்களான ஆம்ஸ்ரோங் எட்ஊன் ஆல்டிரின் ஆகிய இருவரது காலடிகளுக்குப் பின்னர் அப்பல்லோ-12 வீரர்கள் அப்புகழைத் தட் டிக்கொண்டனர்.



## நிலா வாகனம் கைவிடப்பட்டது

நிலாவில் வீரர்கள் இறங் குவதற்கு உதவிய 'இன்ட பிட்' என்ற நிலாவாகனம் தாய்க்கப்பலுடன் இணைந்த ஒரு மணி நேரத்தில் கை விடப்பட்டது கலங்கள் இரண்டும் இணைந்துகொண் டதும் சந்திரனிலிருந்து எடுத்து வரப்பட்ட மண் கற்பாறை சர்வேயர் 3 ஆகிய பொருட்களை தாய் கலத்தில் எடுத்து வைத்த னர்

33 மணத்தியாலயங்க ளின் பின் தமது சகாக்க ளான சந்திர மனிதர்களை நேரில் கண்ட றிச்சாட்கோர் டன் மிகவும் அழகாக இருக் கிறீர்களே என்று கூறிதமது மகிழ்ச்சி ஆரவாரத்தை தெரிவித்தார்,

சார்ள்ஸ் கொன்ருடும் அலன்பீனும் குறிக்கப்பட்ட நேரத்துக்கு ஒருமணிநேரம் முன்னதாக எழுந்திருந்து உணவு முதலியவற்றை முடி த்துக்கொண்டு சந்திரனில் இறங்கத்தயாராஞர்கள் குறிக்கப்பட்ட நேரத்துக்கு



அரை மணி முன்னதாகவே தரையில் இறங்குவதற்கு அவர்கள் அனுமதி கேட் டார்களாம். அனுமதிகிடை த்ததும் கொன்ருட் முதலில் இறங்கினர் சற்றுக் கழித்து பீன் இறங்கினர்.

இருவரும்உடனடியாகவே மண்ணையும் கற்களையும் பொறுக்கியெடுக்கத் தொட ங்கினர்கள ஒரு இடத்தில் மண்ணைத்தோண்டிய போது அங்கேமண்பழுப்பு நிறமா கக்காணப்பட்டதாக கொன் ருடு கூறினர் நன்ருக உழப் பட்ட வயல் தமக்கு ஞாப கத்திற்கு வருகிறது என்ருர் அவர்


### சர்வயர்க்கலம்

சந்திரத்தரையில்சுமார் 4 மணி நேரம் அவர்கள இரு ந்தார்கள மண் மாதிரி களை எடுத்துக்கொண்டபின் னர் அவர்கள இருந்த இட த்திலிருந்து சுமார்150 மீட் டர் தொலைவில் கிடந்த சர் வயர்-3 ஆளில்லாக்கலத்தை நோக்கி அவர்கள போஞர் கர்

அது நல்லநிலையில் இருப்ப தாக கொன்ராட் கூறினர். கண்ணாடிகள்கூட உடையா

படம் எடுத்தபொழுது தரை வழுக்கிவிடக்கூடும் என்று கட்டுப்பாட்டதிகாரிகள் எச் சரிக்கை விடுத்தார்கள்.

இரவு 11-10மணியளவில் அதாவது தாய்க்கலத்துடன் சந்திரக்கலம் இணைவதற்



குச் சற்று முன்னதாக பாதிக்கப்பட்டிருந்த டெலி விஷன் தொலைக்காட்சி மீண் டும் இயங்க ஆரம்பித்தது. சந்திரனிலிருந்து பாதிக்கப் பட்டிருந்த டெலிவிஷன் கருவி, இரண்டு கலங்களும் இணையத் தயாராகிக்கொண் டிருந்தபோது மீண்டும் அது பல வர்ணப் படங்களைப் பூமிக்கு அனுப்பியது உலக மக்கள் இதைக் கண்டு ளித் தனர்.

முன்னைய செய்தி 3-ம் பக்கம்

## "என்பிணத்திலும் அவள் விழிக்கக் கூடாது"

### இப்படி எழுதிவைத்து விட்டு 7 பிள்ளைகளின் தந்தை தற்கொலை

மட்டுவில், வியாழன்

''என் மனைவி எனக்குத் துரோகம் செய்துவிட்டாள். இந்த அவமானத்தைத் தாங்க முடியாத நான் அவளை விட்டுப் பிரிந்து தனித்துவாழ்ந்தேன். ஆனல் கோர்ட்டிலுமேறி இந்த அவமானத்தை கூட் டில் நின்று என் வாயா லேயே தலை நிமிர்ந்து கூற வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு இன்று அவளால் ஆக்கப்பட்டேன். அவ மானம் தாங்க முடியாத நிலையில் நச்சுத்திராவகம் குடித்து மரணத்தை அணைத் துக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. எனவே நான் சாகிறேன், அவள் மட்டும் என் பிணத்திலும் விழிக்கக்கூடாது...''

இப்படி ஒரு நெஞ்சுருக் கும் கடிதத்தை எழுதி வைத்துவிட்டு ஏழு பிள்ளை களுக்கும், தாய்க்கும் ஜீவ ருெம்சம் கட்டத் தவறிய வழக்கு விசாரணைக்காக சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு: கே. விக்னராஜா முன்னிலையில் இன்று ஆஜ ராகவேண்டிய 7 பிள்ளை களின் தந்தையான நூ றை

[4ம் பக்கம் பார்க்க]

## திரு. கருணாநிதி இங்கு வருவதற்கு ஆர்.ஜி. எதிர்ப்பு

கொழும்பு, வியாழன்

தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு கருணாநிதி இலங் கைக்கு வரவிருப்பதாக சில பத்திரிகைச் செய்திகள்கூறு கின்றனவென்றும் இதுஉண் மையானல் அவர் அரசாங் கத்துக்கு அறிவித்துள் ளாராவென்பதை அறிய விரும்புவதாகவும் தம்ப தெனியா பிரதிநிதியும் சிங் கள மகாஜனக் கட்சித் தலை வருமான திரு ஆர். ஜி. சேன நாயகா இன்று ஆட்சிமன் றத்தில் கேட்டார். திரு. கருணாநிதி இலங்கைக்குவர அனுமதிக்கப்பட்டால்இங்கு சிங்கள தமிழ் மக்கள் மத்தி யில் மேலும் வேற்றுமை அதிகரிக்குமென்றும் அவர் இங்கு வருவதற்கு அனும திக்கப்படக் கூடாதென்றும் திரு ஆர். ஜி. கேட்டுக் கொண்டார்.

இதற்கு ராஜாங்கஅமைச் சர் திரு ஜே ஆர். ஜயவர்த் தன பதிலளிக்கையில் திரு கருணாநிதி இலங்கைக்கு வர விருப்பதாக அரசாங்கத் துக்கு தகவல் இல்லையென் றும் அப்படி அறிவிப்புக் கிடைத்தபின் அடுத்த நட வடிக்கைபற்றி ஆலோசிக்க லாமென்றும் சொன்னர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

விற்பனையாளர்:

நல்லூர் மூத்தவிநாயகர் ஐக்கிய பண்டகசாலைக்கு ஒரு விற்பனையாளர் தேவை. 8-ம் வகுப்புச் சித்தியுடன் கூட்டுறவு விற்பனையாளர் பயிற்சி அல்லது வியாபார அனுபவம் பெற்றிருக்க வேண்டும். 16—30 வயதுக்குட்பட்டவராயும், ரொக்கப் பிணை ரூபா 250/- கட்டக்கூடியவ்ராயும் இருக்க வேண்டும். சம்பளம் ரூபா 75/-. 28-11-69க்கு முன் இரண்டு நற்சாட்சிப்பத்திரங்களுடன் S. S. பெரியதம்பி, 68, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 1555


அகில இலங்கை

## இ. போ. ச. ஊழியர் உடற்பயிற்சிபோட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கை இ. போ. ச. ஊழியர்களின் 6-வது வருடாந்த உடற்பயிற்சிப் போட்டி வருகிற 22 ம் திகதி, பம்பலப்பிட்டி சென். பீற்றர் கல்லூரி மைதானத்தில் மிகவிமர்சையாக நடைபெறவிருக்கின்றது.

இவ் விழாவுக்கு தேசிய மயசேவைகள், விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. வீ. ஏ சுகததாச பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (தே. நி


## யாழ்ப்பாண மாநகரசபை கேள்வி அறிவித்தல்

### சந்தைக் குத்தகைகள் 1970

மேற்படி விடயம் சம்பந்தமாக 6-11-69-ந் திகதிய 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியான விளம்பரத்தின் பிரகாரம் அறியத்தருவது.

மேற்படி சந்தைக் குத்தகைகளுக்கான கேள்விப் படிவங்களைப் பெறும் திகதி 27-11-1969 வியாழக்கிழமை நண்பகல் 12 மணி வரையும், கேள்விகள் ஏற்கும் திகதி 28-11-1969 வெள்ளிக்கிழமை பி. ப. 4 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

மேலும் சந்தைகள், சந்தைக் கடைகள், சபைக் காணிகள். மற்றும் கட்டடங்கள் ஆகியவற்றின் சகல கேள்விகள் சம்பந்தமாகவும், முந்திய ஆண்டின் ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வித் தொகையின் 50 வீதம் குறைவுபடாது, ஒவ்வொரு கேள்விக்கும் எதிராகக் குறிப்பிடப்பட்டிருக்கும் தொகைகளுக்கு காரியாதிகாரிகளால் வழங்கப்பட்ட பெறுமதிச் சான்றிதழ்களைக் கேள்விப் பத்திரத்துடன் கேள்விக்காரர் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

ஏ. ரி. சுந்தரம்,
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகரசபை.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
19-11-69. 1827



## கேள்வி விளம்பரம்

### பனங்காமம் கிராமசபை

பாண்டியன்குளம் - நட்டான்கண்டல் ரோட்டு வேலை செய்வதற்கு ரூ .5000/-க்கு மேல் பதிவுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து 1969-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 27-ந் திகதி காலை 10 மணி வரைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

ரூபா 10/- கி. ச. கந்தோரில், கந்தோர் நேரங்களில் 26-11-1969 நண்பகல் 12 மணி வரைக்கும் செலுத்தி கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளவேண்டும்.

கேள்விப் பத்திரத்தின் பிரதி. மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு, கி. ச தலைவருக்கு அனுப்பப்படும் அதே திகதியில் அனுப்புதல் வேண்டும். தான் ஒப்பந்தகாரன் என்று நிரூபிப்பவருக்கே கேள்விப் பத்திரம் வழங்கப்படும்.

மேற்கண்ட விபரங்கள் எதுவும் கி. ச கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

சூ. தம்பையா ஜே. பி.,
கி. ச. தலைவர்,
பனங்காமம்,
நட்டான்கண்டல்.

கி ச. கந்தோர்,
நட்டான்கண்டல்,
மாங்குளம்,
15-11-1969. 1828


## ஸ்தலஸ்தாபன ஊழியர்களுக்கு அக். 1 முதல் சம்பள உயர்வு

கோட்டை, வியாழன்

இலங்கை பூராவுமுள்ள சுமார் 600-க்கு மேற்பட்ட ஸ்தலஸ்தாபனங்களில் உள்ள சுமார் பதினையிரம் ஊழியர்களின் சம்பள விகிதங்கள் அக்டோபர் 1-ந் திகதியிலிருந்து அதிகரிக்கப்பட்டுள்ளன. சம்பளக் கமிஷனின் இடைக்கால அறிக்கையில் இந்த ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட விகிதத்துக்கு இணங்க ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷன் இவ்வாறு தீர்மானித்தது.

| | பழைய விகிதம் | புதிய விகிதம் |
|---|---|---|
| கொழும்பு முனிசிப்பல் கமிஷனர் | ரூ 16,800—24,600 | ரூ 20,040—27,240 |
| கொழும்பு கண்டி தவிர்ந்த ஏனைய முனிசிப்பல் கமிஷனர்கள் | ரூ 6,960—13,200 | ரூ 9,600—16,320 |
| ஸ்தலஸ்தாபன விகிதர்சேவை, விசேடதரம் | ரூ 3,900—6,540 | ரூ 6,600—9,240 |
| பொதுசன சுகாதாரப் பரிசோதகர்கள் | ரூ 2,700—5,160 | ரூ 5,160—7,860 |
| வாடிவிட்டுக் காப்பாளர்கள் 1-ம் தரம் | ரூ 876—1,506 | ரூ 2,820—3,720 |
| மருத்துவத் தாதிமார் | ரூ 750—1,380 | ரூ 2,640—3,600 |
| செய்தித் தூதர்கள் | ரூ 480 624 | ரூ 2,100—2,370 |

இப்புதிய கூட்ட மொத்தச் சம்பள விகிதப்படி ஸ்தலஸ்தாபனங்களின் சம்பளச் செலவு மொத்தம் ஐந்துகோடி ரூபாவினால் அதிகரிக்கும்.

12 முனிசிப்பல் சபைகள், 40 நகரசபைகள், 1,000 பட்டினசபைகள், 506 கிராமசபைகள் ஆகியவை புதிய சம்பள விகிதப்படி ஊழியர்கட்குச் சம்பளம் வழங்கும் சில பழைய, புதிய விகிதங்களே மேற்கூறப்பட்டவை.

## பரிசு பெற்றனர்

முல்லைத்தீவு, வியாழன்

கைதடி இந்துவாலிபர் சங்கத்தின் ஆறுவது சைவ மாநாட்டை முன்னிட்டு நடைபெற்ற நாடகப் போட்டி, நடனப்போட்டி, கட்டுரைப்போட்டி, பேச்சுத் திறனய்வுப் போட்டி திருவைந்தெழுத்து எழுதும் போட்டிகளில் வெற்றியீட்டியோர்விபரம் வருமாறு:

சைவசமய நாடகப் போட்டி: இளவாலை இந்து இளைஞர் சனசமூக நிலையம், இளவாலை இளங்குமரன் கலாமன்றம், கைதடி ஆங்கில பாடசாலை, கைதடி பராசக்தி நாடகமன்றம்

சைவசமய நடனப் போட்டி: கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலை கைதடி, ஆங்கில பாடசாலை.

தனி நடனப் போட்டி: செல்வி நளினிவேலாயுதர். கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி.

பாடசாலைப்பரிசு: கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலை.

நாவலர் கட்டுரைப் போட்டி: செல்விசெகசோதியம்மா சுப்பிரமணியம் கைதடிதெற்கு, செல்வன் க. இராசதுரை, இந்துக் கல்லூரி, சாவகச்சேரி. செல்வி சு. நாகரத்தினம், கைதடி விக்கினேஸ்வர வித்தியாசாலை.

மாநாட்டில்வைத்து இவர்களுக்குப் பரிசுவழங்கப்பட்டது.

## இன்றைய பலன்

### சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்**- இன்னலின் பின்னல் உங்கள் முன்னேற்றத்தை தடுக்கும். இதயபாரம் வேதனைப்படுத்தும் திடசித்தம் இருப்பின் எதையும் சமளிக்கலாம்.

**ரிஷபம்**- தாம்பத்தியவாழ்வில் அன்புதவழும். வழ்க்கையில் தரமும் உயரும். காதலர்கள் வாழ்வில் கற்கண்டான நாள்.

**மிதுனம்**- குருவின் ஆசியுடன் குறிக்கோளும் வெற்றி காணும். குன்றென நிமிர்ந்து நிற்பீர். குவிந்திடும்புகழும்.

**கடகம்**- தடைபட்ட காரியங்கள் நல்ல முடிவுக்கு வரும். தாய்வழிப்பெருமையுண்டு. வாகனநலனுடன் வாழ்விலும் சுகம்காணும்.

**சிம்மம்**- தெளிந்தமனம், தெய்வசிந்தை, தேடியது கிடைக்கும். அமைதியுடன் ஆனந்தவாழ்வும் உண்டு.

**கன்னி**- மனதில் அமைதி குன்றும். எதிரிகள் எக்காளம் இடுவர். மறைந்த நினைவுகள் மீண்டும் தலைதூக்கும் அமைதியே நன்று.

**துலாம்**- காதலர்களுக்கு கனகுஷியானதினம் பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும். இல்லத்தில் இனிமையான சம்பவங்கள் இடம்பெறும். இன்று சுபதினம்.

**விருச்சிகம்**- புதிய சலையிடி தலைதூக்கும். வணிகர்கள் வாழ்க்கை சோதனை நிறைந்ததாக இருக்கும். மாணவர்கள் உணர்ச்சிவசப்படாது இருத்தல் நன்று.

**தனுசு** நீண்டநாள் கனவு இன்று நனவாகும். பெரியவர்கள் உதவிக்கு வருவர். புண்ணிய விருப்பு மேலிடும்.

**மகரம்**- தொழில்துறையில் முன்னேற்றம் தொடர்ந்து வரும் புகழ்நிதியில் அபிவிருத்தி நிம்மதி பிறக்கும்.

**கும்பம்**- பொருள்வரவு உபசாரம் பொழுதுபோக்கு இவைகளுடன் உற்சாகமூட்டும்செய்தியும் கிடைக்கும்.

**மீனம்**- கழுகுப்பார்வை வட்டமிடும் காத்திருப்பர் பகைவர். நிதிநெருக்கடியைத் தவிர்க்க மதிவழிநில்.


## பகிரங்க ஏல விற்பனவு

உடுப்பிட்டி கி. ச. பகுதி ப. நோ. கூ. ச. சமாசத்திற்கு சொந்தமான 22 ஸ்ரீ 3769 இலக்க ஒஸ்ரின் லொறி 23-11-69 ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். 12-11-69 தொடக்கம் 21-11-69 மாலை 4 மணி வரை லொறியை மேற்படி சமாசத்தில் கந்தோர் நேரங்களில் பார்வையிடலாம். கேள்வியில் லொறி பெற்றவர் உடனடியாக 50 வீதப் பணத்தை ரொக்கமாக மேற்படி சமாசத்தில் கட்ட வேண்டும் மிகுதி 50 வீதப் பணத்தையும் அன்று மாலை 4 மணிக்கு முன்பு மேற்படி சமாசத்தில் ரொக்கமாகக் கட்டி லொறியை எடுத்துக்கொள்ள வேண்டும்.

1818

பொ. கணபதிப்பிள்ளை.
தலைவர்


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 21—11—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 பண்ணிசைத்தமிழ், 8-00 செய்திச்சுருக்கம், முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 திரைகானம், 1-30 செய்திச் சுருக்கம்.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03

## தீவுப்பகுதி விளையாட்டுச் செய்திகள்

### புங்குடுதீவு வென்றது

அல்லைப்பிட்டி, வியாழன்

விளையாட்டு அமைச்சு ஆசரவுடன் தீவுப்பகுதிக் காரியாதிகாரி பிரிவு விளையாட்டுச் சங்கத்தினரால் காலஞ்சென்ற திரு இ நல்லதம்பி ஜே. பி. யின் ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்திற்காக நடாத்தப்பட்டு வரும் 'பி' பிரிவு உதைபந்தாட்டப் போட்டியின் இரண்டாவது ஆட்டத்தில் காரைநகர் நீலிப்பந்தனை சனசமூக நிலைய விளையாட்டுக்கழகக் கோஷ்டியினரும் புங்குடுதீவு அர்ச் சேவியர் விளையாட்டுக் கழகக் கோஷ்டியினரும் மோதிக்கொண்டனர்.

இடைவேளைக்குப் பின்னர் ஆட்டம் மந்த நிலையில் காணப்பட்டது. நீலிப்பந்தனைக் கோஷ்டியினர் பல கோல்போடும் சந்தர்ப்பங்களை நழுவவிட்டனர். ஆட்டம் முடிவதற்கு ஐந்து நிமிடங்களுக்கு முன் [illegible] போட்டு [illegible] ணமாக நீலிப்பந்தனைக் [illegible]க்குமுன்னர் நடைபெற்ற போட்டியில் பாரதி 6 பழங்களையும் திருவள்ளுவா 4 பழங்களையும் பெற்றுக்கொண்டன இடைவேளையின் பின்னர் போட்டி மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது. ஈற்றில் 10—6 பழங்களால் பாரதி கோஷ்டியினர் திருவள்ளுவர் கோஷ்டியினரைத் தோற்கடித்தனர். இப்போட்டி புங்குடுதீவு விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

வேலணை செட்டிபுலம் சனசமூக நிலையக் கோஷ்டியினருக்கும் ஊர்காவற்றுறை றேஞ்சஸ் விளையாட்டுக்கழகக் கோஷ்டியினருக்குமிடையே நடைபெற்ற மற்றொரு போட்டியில் செட்டிபுலம் கோஷ்டியினர் 15—9 பழங்களால் ஊர்காவற்றுறை றேஞ்சஸ் விளையாட்டுக் கழகக் கோஷ்டியினரைத் தோற்கடித்தனர்.

ஊர்காவற்றுறைபுனிதஅன்ரனிஸ் விளையாட்டுத்திடலில் இப்போட்டி நடைபெற்றது மேற்படி போட்டிகளுக்கு தீவுப்பகுதி [illegible]

## சேமிப்புவாரம்

முசலி வியாழன்

மன்னார் அரசாங்க அதிபர் திரு எஸ். கதிர்காமநாதன் தலைமையில் மன்னார் கச்சேரி மண்டபத்தில் நடந்த சேமிப்பு இயக்கக் கூட்டத்தில், மன்னார் மாவட்டத்தில் 1970-ம் ஆண்டு முற்பகுதியில் சேமிப்பு வாரம் நடத்துவதென்று ஆலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மன்னார் மாவட்டக் காரியாதிகாரிகள் உட்பட பல அரசாங்க ஊழியர்கள் சமூகமளித்தார்கள்.

பிரதேச சேமிப்பு இயக்கச் செயலாளர் திரு ஆர் சற்குணராஜா சேமிப்பு வாரத்தைப் பற்றியும், இயக்கத்தைப் பற்றியும், உரையாற்றினார்.

## இளவாலை வெற்றி

பண்டத்தரிப்பு, வியா

இளவாலை [illegible]என்றியரசர் கல்லூரிக்கும் [illegible] அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் இளவாலை என்றியர


## யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி

உங்கள் குடும்பம் சிறக்க
உங்கள் நாடு செழிக்க
உங்கள் வங்கியில் சேமியுங்கள்

1 சேமவைப்பு

தினமும் பணம் போடுவதற்கும் எடுப்பதற்கும் வசதியுள்ள சேமவைப்பு. இச்சேமிப்பில் மாதம் மாதம் இருக்கும் குறைந்த மிகுதிப்பணத்திற்கு 3 3/4 % வட்டி கொடுக்கப்படும். மிகவும் தெரிந்த வாடிக்கைக்காரர்களுக்கு அவர்களின் காசோலை, காசுக்கட்டளை முதலியன இச்சேமிப்புக் கணக்கின் மூலம் வசூல் செய்துகொடுக்கப்படும்.

2 மாதாந்த தொடர் சேமவைப்பு

ரூபா 1/- தொடக்கம், அதன் எத்தனை மடங்குகளும் இச்சேமிப்பு முறையில் 60 மாதங்களுக்கும், 81 மாதங்களுக்கும், 120 மாதங்களுக்கும் மாதவீதம் பணம்போட்டுச் சேமிக்கலாம். உதாரணமாக - ரூபா 1/- மாதம் மாதம் கட்டுபவர் 60 மாதமுடிவில் ரூபா 70/- பெறுவார், 81 மாத முடிவில் ரூபா 100/- பெறுவார். 120 மாதமுடிவில் ரூபா 163/- பெறுவார்.

3 நிலைச்சேமவைப்பு

இச்சேமவைப்பில் எவ்வளவு தொகையும் போடலாம். 12 மாத சேமவைப்புக்கு 4% வட்டிகொடுக்கப்படும். 60 மாத சேமவைப்புக்கு 5% வட்டி கொடுக்கப்படும். 120 மாதசேமவைப்புக்கு 5 1/2% வட்டி கொடுக்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு அண்மையிலுள்ள கிளை வங்கிகளுடன் தொடர்புகொள்ளவும்.

கிளைகள்

யாழ்ப்பாணம் - 59, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
பரந்தன் - கண்டி வீதி, பரந்தன்.
சுன்னாகம் - காங்கேசன்துறைவீதி, சுன்னாகம்
நெல்லியடி - கரவெட்டி வீதி, நெல்லியடி-
சங்கானை - சங்கானை
சாவகச்சேரி - கண்டிவீதி, சாவகச்சேரி.



ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்

ஜெய்சங்கர்-விஜயகுமாரி
முத்துராமன்-வாணிஸ்ரீ
நடித்த

# டீச்சரம்மா

ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி - சரோஜாதேவி
எஸ்.எஸ் ஆர்.-ராஜசுலோஜனு


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தினசரி 3 காட்சிகள் நடித்த

# டீச்சரம்மா

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

ஜெமினி - சரோஜாதேவி
எஸ்.எஸ் ஆர்.-ராஜசுலோஜன
நடித்த

# குலவிளக்கு


# வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்
தென்னகத்திரைகளில்
100 நாட்களுக்குமேல் ஓடிய
வெற்றிச்சித்திரம்

# எதிர்நீச்சல்

## யாழ். வெலிங்டன்

மற்றும்
சில சினிமாஸ் திரைகளில்
இப்பொழுது திரையிடப்படுகிறது



பத்மஸ்ரீ ★ சிவாஜி கணேசன்
நாட்டியப் பேரொளி ★ பத்மினி
காதல் ராணி ★ கே. ஆர். விஜயா
ஹாஸ்ய மன்னன் ★ நாகேஷ்
★ மனோரமா ★ முத்துலக்ஷ்மி ★ வி. கே. ராமசாமி
மற்றும் பலர் திறம்பட நடித்த
கமலா பிக்சர்ஸ் அளிக்கும்

# பாலாடை

டைரக்ஷன் ஏ. பீம்சிங் | பாடல் கண்ணதாசன் | இசையமைப்பு கே. வி. மகாதேவன்


சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 திரைகானம், 1-30 செய்திச் சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 நாளைய சந்ததி, 5-45 அஸான்.

இரவு 6-15 வயலின், 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்னாடக இசை, 7-35 முத்திநெறி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 கர்னாடக இசை, 10-30 செய்திச்சுருக்கம்.


## வெஸ்லி சினிமா

மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
ரவிச்சந்திரன் - காஞ்சனா
நடித்த
அதே கண்கள்

வல்வெட்டித்துறை
## றஞ்சனா தியேட்டர்

தினசரி 2-30 6-30, 9-30.
சுந்தரராஜன். - பத்மினி
பேபிராணி
நடித்த
குழந்தைக்காக

## ஸ்ரீ காலிங்கா

இணுவில்
தினசரி 3 காட்சிகள்
தினசரி 2-30, 6-30, 10-00
எம். ஜி. ஆர். — சிவாஜி
நடித்த
கூண்டுக்கிளி

## REGAL JAFFNA

Daily 3-45, 7, & 10-00 p.m.
Lee Marvin,
Ernest Borgnine
in
THE DIRTY DOZEN
(Adults)

## MANOHARA

JAFFNA
Daily 3 shows,
Yul Brynner,
Robert Mitchum
IN
VILLA RIDES!
(Color & Scope)
From tomorrow
Mark Burns
in
DEATH IS A WOMAN
Its a best Spy Film


ஆட்டம் மந்த நிலையில் காணப்பட்டது. நீலிப்பந்தனைக் கோஷ்டியினர் பல கோல்போடும் சந்தர்ப்பங்களை நழுவவிட்டனர். ஆட்டம் முடிவதற்கு ஐந்து நிமிட நேரம் இருக்கும் போது சிறு தகராறு காரணமாக நீலிப்பந்தனைக் கோஷ்டியினர் விளையாட்டுத் திடலைவிட்டு வெளியேறும் போது சேவியர் கழகத்தினர் 1 கோலைப் போட்டனர். இறுதியில் 8—3 கோல்களால் புங்குடுதீவு அர்ச் சேவியர் விளையாட்டுக்கழகத்தினர் காரைநகர் கோஷ்டியினரைத் தோற்கடித்தனர். வேலணை மத்திய கல்லூரி விளையாட்டுத்திடலில் நடைபெற்றஇப்போட்டிக்கு தீவுப்பகுதி உடற் பயிற்சி அதிகாரி திரு. பி. பொன்னுச்சாமி மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

### சமமாக முடிந்த ஆட்டம்

'பி' பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் மூன்றாவது ஆட்டத்தில் அல்லைப் பிட்டி றூமன் - பிலிப் விளையாட்டுக் கழகக் கோஷ்டியினரும், வேலணை ஐயனார் சனசமூக நிலையக் கோஷ்டியினரும் மோதிக்கொண்டனர். இரு பகுதியினரும் மிகவும் தீவிரமாக விளையாடிய போதிலும் ஒரு கோலும் போடாததினால் ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. அல்லைப்பிட்டி விளையாட்டுத் திடலில் நடைபெற்ற இப்போட்டிக்கு தீவுப்பகுதி உடற்பயிற்சி அதிகாரி திரு. பி பொன்னுச்சாமி மத்தியஸ்தம் வகித்தார்.

### யாழ்ரன் வெற்றி

காரைநகர் யாழ்ரன் விளையாட்டு வீரர்களுக்கும் வேலணை மத்திய கல்லூரி விளையாட்டு வீரர்களுக்குமிடையே சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியொன்று காரைநகர் யாழ்ரன் கல்லூரி விளையாட்டுத் திடலில் நடைபெற்றது. ஈற்றில் 2...0 கோல்களால் யாழ்ரன் கோஷ்டியினர், வேலணைக் கோஷ்டியினரைத் தோற்கடித்தனர்.

### கிளித்தட்டுச் சுற்றுப்போட்டி

விளையாட்டு அமைச்சின் ஆதரவுடன் தீவுப்பகுதி காரியாதிகாரி பிரிவு விளையாட்டுச் சங்கத்தினரால் திரு. எஸ் சிவகடாட்சத்தின் வெற்றிக் கேடயத்திற்காக நடாத்தப்பட்டுவரும் கிளித்தட்டு சுற்றுப்போட்டியின் இரண்டாவது ஆட்டத்தில் புங்குடுதீவு பாரதி சனசமூகநிலையக் கோஷ்டியினரும் சரவணை திருவள்ளுவர் சனசமூக நிலையக் கோஷ்டியினரும் மோதிக் கொண்டனர். இடைவேளை

... புலம் கோஷ்டியினர் 15—9 பழங்களால் ஊர்காவற்றுறை றேஞ்சஸ் விளையாட்டுக் கழகக் கோஷ்டியினரைத் தோற்கடித்தனர். ஊர்காவற்றுறைபுனித அன்ரனீஸ் விளையாட்டுத்திடலில் இப்போட்டி நடைபெற்றது மேற்படி போட்டிகளுக்கு தீவுப்பகுதி உடற் பயிற்சி போதனாசிரியர் பி பொன்னுச்சாமி, நடராசா ஆகியோர் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

### ஓட்டப்போட்டியில் பரிசு பெற்றனர்

ஊரதீவு. வியாழன்

புங்குடுதீவு குறிகாட்டுவான் நடுத்துருத்தி சனசமூக நிலையத்தினர் நடத்திய ஓட்டப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குரிய பரிசுகளை திரு. க. சிவரத்தினம் வழங்கினார்.

பாலர் பிரிவில் முதலாம் இடத்தை இ. பிரேம்குமாரும் இரண்டாமிடத்தைஇ. லோகநாதனும் பெற்றனர். மத்திய பிரிவில் சி. நித்தியானந்தன் முதலாம் இடத்தையும் மு கனகேஸ்வரன் இரண்டாம் இடத்தையும் அ. பத்திநாதன் மூன்றும் இடத்தையும் பெற்றனர் மேற்பிரிவில் மு. துரைச்சாமி முதலாம் இடத்தையும் சி. நாகேஸ்வரன் இரண்டாம் இடத்தையும் த. மே. கணதாசன் மூன்றும் இடத்தையும் பெற்றனர்.

### பாலர் கிளித்தட்டு

ஊரதீவு சங்கிலியன் பாலர் போதனா நிலைய மாணவருக்கும், ஊரைதீவு திருவள்ளுவர் பாலர்கழகத்தினருக்குமிடையில் நடைபெற்ற கிளிதட்டுப்போட்டியில் திருவள்ளுவர் பாலர் கழகத்தினர் வெற்றிவாகை சூடினர். ஊரதீவு இளந்தமிழர் மன்றத்தினரால் மன்ற விளையாட்டுத்திடலில் இரண்டுபிரிவாக நடாத்தப்பெற்ற இந்தப் போட்டியில் முதல்பிரிவுக்கு மன்றத் தலைவர் திரு. பொன்கைவேந்தனும் இரண்டாவது பிரிவுக்கு மன்றச்செயலாளர் ந இராசதுரையும் மத்தியஸ்தம்வகித்தனர். பாலர் போதனாநிலையக் குழுவுக்கு ந. பிரபாகரனும் பாலர் கழகக்குழுவுக்கு கு சண்முகலிங்கமும் தலைமைதாங்கி விளையாடினர்.

## மண்ணெண்ணை தட்டுப்பாடு

பூநகரி, வியாழன்

பூநகரிப்பகுதியில் மண்ணெண்ணைக்குத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எண்ணை கையிருப்பிலுள்ள சில கடைகளில் ஆளுக்கு கால்போத்தல்வீதம் வழங்கப்படுகிறது. விளக்கெரிப்பதற்கும் மண்ணெண்ணையின்றி இப்பகுதி மக்கள் கஷ்டமுறுகின்றனர்.

### இளவாலை வெற்றி

பண்டத்தரிப்பு, வியா

இளவாலை என்றியரசர் கல்லூரிக்கும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் இளவாலை என்றியரசர் கல்லூரியினர் 4 கோல்களைப் போட்டனர். அருணோதயாக் கல்லூரியினர் ஒரு கோலும் போடவில்லை அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் இவ்வாட்டம் நடைபெற்றது


மேலும் விபரங்களுக்கு அண்மையிலுள்ள கிளை வங்கிகளுடன் தொடர்புகொள்ளவும்.


கிளைகள்

யாழ்ப்பாணம் - 59, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
பரந்தன் - கண்டி வீதி, பரந்தன்,
சுன்னுகம் - காங்கேசன்துறைவீதி, சுன்னுகம்
நெல்லியடி - கரவெட்டி வீதி, நெல்லியடி-
சங்கானை - சங்கானை
சாவகச்சேரி - கண்டிவீதி, சாவகச்சேரி.
ஊர்காவற்றுறை - ஊர்காவற்றுறை.
வலி-கிழக்கு - பருத்தித்துறை வீதி, புத்தூர்

தலைமைக்காரியாலயம்:
59, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பே. எண். 633

# செலவினங்களுக்குக் கடிவாளமிடுவது

# உஷா





உஷா விசிறிகள் உங்கள் மாதாந்தச் செலவைச் சுருக்குகின்றன; மின்சாரச் செலவுக் கட்டணத்தைக் குறைக்கின்றன; பராமரிப்பு விஷயத்தில் நீங்கள் பராமுகமாக இருந்துவிடலாம். உங்கள் இல்லத்தின் அழகுக்கு அழகு செய்யும் ஒயிலான வடிவங்களில் கிடைக்கின்றன.*

* கீழ் லைட்டுடனே லைட் இன்றியோ.

சிறந்ததை வாங்குங்கள்: உஷா எல்லாவற்றிலும் சிறந்தது

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, மெயின் வீதி, ஆகியவற்றிலுள்ள உஷா விற்பனை நிலையங்களிலும் சாவகச்சேரி, சுன்னுகம், பருத்தித்துறை, அச்சுவேலி, கிளிநொச்சி, திருக்கோணமலை, அநுராதபுரம் மற்றும் நகரங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பல்லோ-12 வீரர்கள் இருவரும் அம்புலியில் அரை மணிநேரம் அதிகமாகத் தங்கினர்கள்

## முதல்கட்ட சோதனைகள் வெற்றிகரமாக முடிந்தன

ஹுஸ்டன், நவம்பர் 20

சந்திரத்தரையில் இறங்கிய அப்பல்லோ-12 வீரர்கள் சார்ல்ஸ் கொன்ருடும் அலன்பீனும் அங்கு நான்கு மணி நேரம் நடமாடிய பின்னர் மீண்டும் தமது சந்திரக் கலமான இன்ரட்பிட்டில் ஏறி ஓய்வெடுத்துக்கொண்டார்கள்.

இன்டர்பிட்டில் ஒன்பது மணி நேரம் ஓய்வெடுத்தபின் அவர்கள் இன்று மீண்டும் சந்திரத்தரையில் இறங்கவிருக்கிறார்கள்.

நேற்று சந்திரத்தரையில் இறங்கிய இரு வீரர்களும் அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட ரேத்திற்கும் அரைமணி நேரம் அதிகமாக சந்திரனில் கழித்தார்கள.

சந்திரப்பாறைகளின் மாதிரிகளையும் தூசிப்படலங்களையும் அவர்கள் சேகரித்தார்கள். அதற்கு முன்னர் சந்திரத்தரையை ஆராய்வதற்கான விஞ்ஞானக் கருவிகளைப் பொருத்தினர்கள். இந்தக்கருவிகளை அவர்கள் திறமையாகப் பொருத்திவிட்டதாகவும் அது உடனடியாகப் பூமிக்குத் தகவல்களை அனுப்பத் தொடங்கிவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. இந்தக் கருவி அணுசக்தியினுல் இயங்குவது. சுமார் ஓர் ஆண்டு காலம் இயங்குமென்று கருதப்படுகின்றது.

### தூசிகளைத் தட்டிவிட்டனர்

இரு வீரர்களும் சந்திரத்தரையில் தம்மால் முடிந்த அளவு பாறைத் துண்டுகளையும், மண், தூசிகளையும் அள்ளி எடுத்து அதற்கெனக் கொண்டுசென்ற பைகளில் நிரப்பிக்கொண்டு கலத்திற்குத் திரும்பினுர்கள். அவர்கள் அரைமணிநேரம் அதிகமாக சந்திரத்தரையில் கழித்த போதிலும் தமது கடமைகளைச் செய்வதில் தீவிரமாக ஈடுபட்டிருந்ததால், அவர்களைத் தங்களின் கலத்திற்குத் திரும்பும்படி நிலக் கட்டுப்பாட்ட திகாரிகள் திரும்பத்திரும்ப ஞாபகப் படுத்தவேண்டியிருந்தது

சந்திரக்கலத்திற்குள் ஏறுவதற்குமுன் இருவரும் தமது உடைகளில் படிந்தி[illegible] அவர்கள் செலுத்திக் கொள்வார்கள்.

இன்று அவர்கள் செய்யும் முக்கியபணி சந்திரனில் ஏற்கனவே கிடக்கும் அமெரிக்க கலமான சர்வேயர்-3 இருக்குமிடத்திற்குப் போவதாகும் அந்தக்கலம் அவர்கள்இறங்கிய இடத்துக்கு சுமார் 200மீட்டர் தொலைவில் கிடக்கின்றது. இந்தக் கலத்திலுள்ள முக்கிய பாகங்களை அவர்கள் கழற்றி எடுத்துக் கொண்டு வருவார்கள் அந்தக்கலத்திலிருக்கும் டெலிவிஷன்கருவியை அவர்கள் எடுத்துவருவார்கள்.

இன்று அவர்கள் இரண்டாவதுமுறையாக இறங்குவதற்குமுன்னர் தமது டெலிவிஷன் கருவிகளைத் திருத்துவதற்கு முயற்சி செய்வார்கள் ஆனுல் அதனைத்திருத்த முடியுமா என்பது தெரியவில்லை.

இன்றிரவு அவர்கள் மீண்டும் சந்திரனிலிருந்து கிளம்பக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## 'புதிய சகாப்தத்துக்கு காங்கிரஸ் தயாராகிறது"

புதுடில்லி' நவ 20

மக்களுக்குப் பணியாற்றுவதற்கு தன்னை அர்ப்பணித்துக்கொள்ளும் விதத்தில் புதிய சகாப்தம் ஒன்றுக்கு காங்கிரஸ்கட்சியை இம்மாதம் 22ம் திகதி ஆரம்பமாகும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அழைத்துச் செல்லும் என்று திருமதி இந்திராகாந்திகருத்துவெளியிட்டிருக்கின்ருர்.

இம்மாதம் 22ம்23ம் திகதிகளில் புதுடில்லியில் திருமதிகாந்தியின் குழுவினரால் நடத்தப்படும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தையொட்டி வெளியிடப்படவிருக்கும் மலருக்கு அனுப்பியுள்ள ஓர் அறிக்கையில் திருமதி காந்தி இந்தக்கருத்தை வெளியிட்டிருக்கிருர்.

காங்கிரஸ் அங்கத்தவர்கள் தமது கருத்துக்களை பயமின்றி தைரியமாக வெளியிடுவதற்கு இந்தமாநாடு வழிகோலும் என்று திருமதி காந்தி கூறியிருக்கிருர்.

ஒற்றுமை முயற்சிகள் மக்கள் நலனுக்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளை விட்டுக்கொடுப்பதாக இருக்கப்படாது என்று அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

இம்மாதம் நடைபெறும் அ. இ. கா, கமிட்டிக் கூட்டத்துக்கான ஏற்பாடுகள் தீவிரமாகநடைபெற்று வருகின்றன.

### நிஜலிங்கப்பா கடிதம்

திருமதி காந்தியைஆதரிக்கும் குழுவினர் அகில இந்தியக் காங்கிரஸ் கூட்டத்துக்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கும் அதே வேளையில் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவேண்டாமென்று கட்டளையிட்டு காங்கிரஸ் தலைவர் திரு நிஜலிங்கப்பா எல்லாக் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தவர்களுக்கும் கடிதம் எழுதியிருக்கிருர்

இந்தக் கூட்டம் கட்சியின் விதிகளுக்கு முரணனது என்றும் திருமதி காந்தியின் போக்கு ஜனநாயகத்துக்கும் சோஷலிஸத்திற்கும் மாறுனதென்றும் திரு நிஜலிங்கப்பா குறிப்பிட்டிருக்ருர்.

பிரதம மந்திரி திருமதி காந்திகாங்கிரஸ்கட்சியிலும் ஆட்சிப் பொறுப்பிலும் அதிகமான அதிகாரங்களை கோரினர்என்றும் இதுதான் கட்சியின் பிளவுக்குக் காரணமாகிற்று என்றும் அவர் கூறியிருக்கிருர்.

## சின்டிகேட் தலைவர்களின் வேடம் கலைந்துவிட்டது

"சின்டிக்கேட் தலைவர் நிஜலிங்கப்பாவும், அவருடைய ஆதரவாளர்களும் ஏற்கனவே சுதந்திரா கட்சியுடனும் ஜனசங்க கட்சியுடனும் தொடர்புவைத்திருந்தனர், சில மாதங்களுக்கு முன்பு இதுபற்றி கூறிய[illegible] எதிர்[illegible] மற்றது என்று மறுத்தார் [illegible] குறிப்பிட்டார்.

'என் மீது சின்டிக்கேட்டினர் குற்றம் சாட்டுகின்றனர். நான் காங்கிரஸின் கொள்கைகளுக்காகவும் திட்டங்களுக்காகவுமே பாடுபடுகிறேன்'' என்றும்திருமதி காந்தி கூறினர்.

### [illegible] அலுவலகம் அமைத்தனர்

சென்னை, நவ. 20

## 'சம்பளத்தை கூட்டவேண்டும் சுருட்டுத்தொழிலாளர் தீர்மானம்

யாழ்ப்பாணம், வெள்ளி

## 'நான் சாதாரண ஊழியன்'

—கிரி



சென்னை, நவ. 20

''நான் இராமேஸ்வரம் போவதால் அங்கு நான்பாவிப்பதற்கு பால் கறக்க விசேஷ பசுமாட்டை அனுப்பத் தேவையில்லை. நான் சாதாரணமனிதன். நாட்டுக்கு சேவைசெய்யும் சாதாரணஊழியன் அப்படியிருக்க மதுரையில் இருந்து இராமேஸ்வரத்துக்கு எனக்காக ஏன் பசுமாட்டை அனுப்ப வேண்டும்'' இவ்வாறு பத்திரிகையாளரிடம் கூறினுர் ஜனுதிபதி திரு. வி. வி. கிரி.

தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் திரு. கிரி இராமேஸ்வரம் செல்லும் போது, சிலர் அவருக்கு பால் கறப்பதற்காக இராமேஸ்வரத்துக்கு மாடு அனுப்ப முயற்சி எடுத்தனர்.

## பொலிஸாருக்கு கேடயம் கிடைக்கவில்லை

முசலி, வியா.

''விளையாட்டுப் போட்டிகள் மூலம் போட்டியாளரிடையே பல நற்பண்புகள் உருவாகின்றன. கர்வமும் சுயநலமும் போட்டிகள் மூலம் அற்றுப் போகின்றன. என்று மன்ஞர் காரியாதிகாரி பிரிவினுல் நடாத்தப்பட்ட மென்பந்தாட்ட இறுதிப் போட்டியின் போது மன்ஞர் மேலதிக நீதிபதி திரு. கே. வி. நவரத்தினம் கூறினுர். மன்ஞர் பட்டினசபை சனசமூக நிலைய மென்பந்தாட்டக் கழகத்துக்கும், மன்ஞர் பொலிஸ் கோஷ்டிக்குமிடையே இப் போட்டி நடந்தது.

மன்ஞர் பட்டினசபை சனசமூக நிலைய மென்பந்தாட்டக் கழகம் வெற்றியீட்டி நாகராஜா வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக்

# தமிழ் நாட்டிலே

சென்னை நவ. 20

சேத்துப்பட்டியில் நேற்று முன்தினமிரவு ஏற்பட்ட தீவிபத்தில் பெண்ணெருவரும் குழந்தையும் உட்பட 3 பேர் பலியானுர்கள்.

சேத்துப்பட்டியில் இரு குடியிருப்புகளில் இரவில் தீ பரவியதாகவும், இதில் 500 வீடுகள் மட்டில்எரிந்து சாம்பராகியதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன. தீ அணைக்கும் படையினர் துரிதமாக தீயுடன் போராடி மற்றப் பகுதிகளுக்குத் தீ பரவாது தடுத்தனர்.

தீப்பிடித்த பகுதிகளை தமிழக முதல்வர் திரு. கருணுநிதி நள்ளிரவு சென்று பார்வையிட்டார். வீடுகளை இழந்தவர்களுக்கு அவர் ஆறுதல் கூறியதுடன் அவர்கள் இரவில் தங்க தகுந்த இடவசதி செய்து கொடுக்கும்படியும் உத்தரவிட்டார்.

0 0 0

### இருவர் மாண்டனர்

லெவல் கிராஸிங்கில்புகைவண்டியொன்றின்மீதுஉழவு யந்திரமொன்று மோதியதில் இருவர் பலியானுர்கள். காயமடைந்தவர்கள் கடலூர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

0 0 0

### ஒத்திவைப்பு

தமிழ்நாடு மேல் சட்டசபைக் கூட்டத் தொடரை கவர்னர் தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்துள்ளார்.

0 0 0

### நல்ல நூல்களை படிக்க வேண்டும்

சென்னை சர்வகலாசாலைக் கட்டிடத்தில் இரண்டாவது தேசிய நூலகவார விழா நடைபெற்றது. 'நல்ல நூல்களைப் படிக்கும்வழக்கத்தை நாம் மேற்கொள்ள வேண்டியது அவசியம்' என்று விழாவினைத் தொடக்கி வைத்த திரு. கே. பாலசுப்பிரமணியஐயர் கூறினுர்.

0 0 0

### மாறுதல் வேண்டும்

'கோவில் நிர்வாக முறையில் மாறுதல்கள் செய்யப்பட வேண்டும்' எனக் கோரிக்கை விடுத்துக் கிளர்ச்சி நடத்த தமிழ்நாடு ஹிந்துமிஷன் திட்டமிட்டுள்ளது. இந்தக் கிளர்ச்சியின் ஒரு பகுதியாக அறநிலைய பாதுகாப்பு இலாகா முன்பு உண்ணுவிரத முமிருக்க அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

0 0 0

### பஸ் வண்டி தொங்கியது

நேற்று முன்தினம் இளம் பெண் ஒருவரின் சடலமும் அவரின் ஆறுமாதக்குழந்தையின் சடலமும் ஒதுங்கின. இப்பெண் தான் தற்கொலை செய்து கொள்ளப்போவதாக உறவினர்களுக்கு கடிதம் எழுதி வைத்துவிட்டுக் கடலில் குதித்ததாகத் தெரியவருகிறது.

0 0 0

### 20-வது ஆண்டுவிழா

சென்னை மாநகராட்சியின் 20-வது ஆண்டுவிழா எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை தமிழக முதல்வர் திரு. மு. கருணுநிதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்திய உதவி ஜனுதிபதி திரு. ஜி. எஸ். பதக் விழாவை ஆரம்பித்து வைப்பார்.

0 0 0

### ஆயுள் தண்டனை

வாணியம்பாடியை அடுத்துள்ள காணமலையைச் சேர்ந்த சின்னப்பன் என்பவர் அவருடைய மனைவியை கொலை செய்ததாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் அவருக்கு ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

.........

## 'கட்சிகளை தடைசெய்க'

—காரியவாசம்

கோட்டை, வியாழன்

'கட்சி அரசியல் முறையே இலங்கையின் அபிவிருத்திக்கு முட்டுக்கட்டையாகவிருக்கிறது. கட்சி அரசியல் முறையை ஒழித்து புதியதொரு முறையில் அரசாங்கத்தைஅமைப்பது அத்தியாவசியமான தொன்ருகும்'

பிரதம மந்திரிக்கு திங்களன்று அனுப்பிவைத்த மகஜரில் எய்கா சுவதேஷி இயக்கத்தலைவர் திரு ஜி. பி. காரியவாசம் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த பொதுத் தேர்தல் கட்சிப்பிரிவுகளையுடையதாக இருக்கக்கூடாது எனவும் கட்சிகளையும் தடைசெய்து அடுத்ததேர்தலுக்கு சுயேச்சை சங்கத் தலைவர்களை நிறுத்த வேண்டுமெனவும் மேலும் அம்மகஜரில் திரு காரியவாசம் குறிப்பிட்டு இது போன்ற திருத்தங்களை பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தில் செய்ய வேண்டியதவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

## ஒருமறுப்பு

வெற்றிலைக்கேணி றேமன் கத்தோலிக்கப் பாடசாலையில் ஒரு மாணவ ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைகளைச் செய்வதில் தீவிர மாக ஈடுபட்டிருந்ததால், அவர்களைத் தங்களின் கலத்திற்குத் திரும்பும்படி நிலக் கட்டுப்பாட்ட திகாரிகள் திரும்பத்திரும்ப ஞாபகப் படுத்தவேண்டியிருந்தது

சந்திரக்கலத்திற்குள் ஏறுவதற்குமுன் இருவரும் தமது உடைகளில் படிந்திருந்த புழுதியைத் தட்டிக் கொண்டார்கள். அப்பல்லோ-11 வீரர்களின் உடலில் ஏற்பட்டிருந்ததை விட அதிகமாக இவர்கள் மீது தூசிபடிந்திருந்ததே இதற்குக் காரணம். நீல் ஆம்ஸ்ரோங்கும், ஆல்ட்ரினும் இறங்கிய இடத்தை விட சார்ல்ஸ் கொன்ருடும், அலன்பீனும் இறங்கிய இடம் புழுதி நிறைந்த இடமாகும்.

## இன்னும் கொஞ்சம் எடுத்திருக்கலாம்

கலத்திற்குள் ஏறிய இரு வீரர்களும் இன்னும் கொஞ்சமதிகமாகவே மண்மாதிரிகளை அள்ளிக்கொண்டுவந்திருக்கலாம் என்று கவலைப் பட்டுக்கொண்டார்கள்.

சந்திரனில் இறங்கியவுடன் டெலிவிஷன் கருவி பழுதடைந்துவிட்டது. வீரர்கள் இறங்கியதை மட்டுமே அது பூமிக்குக்காட்டியது. இதனால் பூமியில் டெலிவிஷனைப் பார்த்துக்கொண்டிருந்த பல்லாயிரக்கணக்கானவர்கள் ஏமாற்றமுற்றனர்.

கலம் ஏற்கனவே குறிப்பிட்ட இடத்தில் துல்லியமாகப் போய் சரியானநேரத்தில் இறங்கியது.

ஆனால், வீரர்கள் சந்திரத தரையில்குறிப்பிட்ட நேரத்தில் இறங்க முடியாமல் போய்விட்டது. இலங்கை நேரப்படி சரியாக மாலை 4-39 மணிக்கு சந்திரத்தரையில் காலடி வைப்பதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனல் மாலை 5 17 மணிககே கொன்ருட் சந்திரனில் இறங்கினர். உடைகளில் ஏதோ பழுது ஏற்பட்டிருந்ததாலும் தலையில் அணியும் தொப்பிகளில் ஏதோ ஈரளிப்புக் காணப்பட்டதாலும் அவைகளைத் திருத்துவதற்காக அவர்கள் அதிக நேரம் எடுத்துக்கொண்டார்கள்

நேற்று பிற்பகல் சரியாக 12. 12 மணிக்கு 'இன்ரபிட்' சந்திரனிலிருந்து சுமார் 50,000 அடி தூரத்தில் வைத்து இறங்குவதற்கான ரொக்கட்டை வெடித்தது. 11நிமிடங்களில் குறிக்கப்பட்ட இடத்தில் துல்லியமாக இறங்கியது கலம்.

கலத்துக்குள் 9மணிநேரம் ஓய்வு எடுத்துக் கொண்ட பின்னர் இன்று மீண்டும் சந்திரனில் அவர்கள்இறங்கவிருக்கிறார்கள். இறங்குவதற்கு முன் தமது முதுகில் இருக்கும் பெட்டி போன்ற பைகளில் பிராணவாயுவை

கலத்திலுள்ள முக்கிய பாகங்களை அவர்கள் கழற்றி எடுத்துக் கொண்டு வருவார்கள் அந்தக்கலத்திலிருக்கும்

பக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## 'சம்பளத்தை கூட்டவேண்டும்'
### சுருட்டுத்தொழிலாளர் தீர்மானம்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் காரியக்கமிட்டி சங்கத் தலைவர் திரு ஆ துரைராசசிங்கம் தலைமையில் கூடி சம்பளம் உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றியது.

மேற்படி தீர்மானத்தை 29ந் திகதி நல்லூரில் நடக்கவிருக்கும் அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத்தொழிலாளர் சங்கத்தின் மகாநாட்டில் ஆராயப்பட்டபின்னர் எந்தத் திகதியிலிருந்து கூலி உயர்த்தப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்படும். இது விடயமாககுறிப்பிட்ட சங்கம் இத் தீர்மானத்துக்கு வரமுன்னர் உற்பத்தியாளர் சங்கத்திடம் சுருட்டுத் தொழிலாளரின் சம்பளம் உயர்த்தப்பட வேண்டுமென.ஒரு மாதத்துக்குமுன்னர் கடிதம்மூலம்கேட்டதாகவும், இதுவரை அதுபற்றி எதுவிதபதிலும் கிடைக்கவில்லையென்றும் திரு துரைராசசிங்கம் கூறினார்.

திரு அ விசுவநாதன், கே பொன்னுத்துரை, எஸ் நாகராசா, பி இராசையா முதலியோர் பேசினர்.

## குத்தித்தற்கொலை

கோட்டை, வியா

மதுபோதையில் காணப்பட்ட வாலிபர் ஒருவர் தன்னைத்தானே கத்தியால் குத்தி மரணமானார். இச்சம்பவம் கொம்பனித்தெரு டீ சொய்சா வீதியில் நடைபெற்றுள்ளது.

குடிபோதையில் வீட்டுக்குச்சென்ற ஆறுமுகம் சிதம்பரம் (வயது 24) என்பவர் அவரது மனைவியிடம் சோறு கேட்டதாகவும். சோறு சமைக்கவில்லை என்று கூறவே கடையில் சோறு வாங்கி வந்ததாகவும் பின்னர் வயிற்றில் தாமே கத்தியால் குத்தியதாகவும் திருமதி சிதம்பரம் (மனைவி) சாட்சியமளிக்கையில் கூறினார்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. வீரக்கோன் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## ஓய்வு பெறுகிறார்

உரும்பராய், வியா

சந்திரபுரம் சந்திர மௌலீச வித்தியாசாலை ஆசிரியர் திரு. விசுவர் ஆறுமுகம் தமது ஆசிரிய சேவையிலிருந்தும் ஓய்வுபெற இருக்கிறார்.

1932 ம் ஆண்டு ஆசிரிய சேவையில் சேர்ந்து அரும்பணிஆற்றிய திரு. ஆறுமுகம் கூட்டுறவுத் துறையிலும் கிராம வளர்ச்சியிலும் முன்னின்று உழைத்து வருபவராவர். மட்டுவில் பதியில் ஒரு கிராம முன்னேற்றச் சங்க மண்டபம் அமைக்கவும் இவர் காரணமாக இருந்தார்.

கிராம மக்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் அபிமானிகளுமாகச் சேர்ந்து ஆசிரியர் ஆறுமுகத்தின் அருஞ்சேவையைப் பாராட்டுமுகமாக விழா எடுக்கத் தீர்மானித்துள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

## காளைச் சின்னம் யாருக்கு?

புதுடில்லி, நவ. 20

காங்கிரஸ்கட்சியின் இரட்டைக்காளைச்சின்னம்சிண்டிக்கேட் கோஷ்டிக்கா, இந்திரா கோஷ்டிக்கா கொடுக்கபடும் என்று இந்திய தேர்தலதிகாரி சென்வர் மா வியிடம் கேட்கப்பட்டது.

இது குறித்து அவர்கருத்துத் தெரிவிக்கையில்'' இப்பிரச்னை பற்றி நான் இதுவரை யோசிக்கவில்லை. காங்கிரஸ் கட்சிதான் ஒன்று'' சின்னத்தைப்பற்றிப்பிரச்னை கிளப்பும் போதுதான் நான் சட்டப்படி இதற்குத் தீர்வு காண்பேன் அப்படித் தீர்வு காணுமுன்பு இரு பக்கத்து பிரதிநிதிகளையு மழைத்து. மநிலங்களிலும், ஆட்சி மன்றத்திலும் யாருக்கு அதிகபலம் இருக்கிறதென்பதை அவர்களிடமிருந்து அறிந்து, அதிகபலம் உள்ளவர்களுக்கு இரட்டைக்காளை சின்னம் வழங்குவேன்'' என்றார்.

## 'பெயர்களை மாற்றுக'

கோட்டை, வியா

மருதானை முதலாம் இரண்டாம் பிரிவுகளை பி. டி. எஸ் குலரத்தின மாவத்தையை எல். எச். மெத்தானந்தா மாவத்தை எனப் பெயரிடுமாறு கொழும்பு மாநகர சபையைச் சில சமூக சேவை நிறுவனங்கள் கோரியுள்ளன.

டைய ஆதரவாளர்களும் ஏற்கனவே சுதந்திரா கட்சியுடனும் ஜனசங்க கட்சியுடனும் தொடர்புவைத்திருந்தனர், சில மாதங்களுக்கு முன்பு இதுபற்றி கூறியபோது கடுமையாக எதிர்த்தார்கள். அது ஆதாரமற்றது என்று மறுத்தார்கள் இன்று காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளுக்குமுழு விரோதமான சுதந்திராக் கட்சியுடன் ஐக்கியமாகிவிட்டார்கள்''

திருமதி இந்திராகாந்தி தமது இல்லத்தினருக்கே நடைபெற்றபஸ்-வாடகைக் கார் சாரதிகளின் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு

னர் குற்றம் சாட்டுகின்றனர். நான் காங்கிரஸின் கொள்கைகளுக்காகவும் திட்டங்களுக்காகவுமே பாடுபடுகிறேன்'' என்றும்திருமதி காந்தி கூறினார்.

## தனி அலுவலகம் அமைத்தனர்

சென்னை, நவ. 20

திருமதி இந்திராவை ஆதரிக்கும் காங்கிரஸ் காரர்கள் மதுரையில் தனியே காங்கிரஸ் அலுவலகமொன்றை அமைத்துள்ளனர்.

மதுரை யானைக்கல் தைக்கால் தெருவில் இருந்துவந்த காமராஜர் மன்றத்தை இந்திராகாந்தி மன்றும் என்றும் மாற்றி அமைத்துள்ளனர்.

பிரதம மந்திரி இந்திரா

# எதிரிகளை வீழ்த்த சோஷலிஸத்தை பாவிக்கிறார்
## சஞ்சீவரெட்டி குற்றச்சாட்டு

புதுடில்லி, நவ. 20

''இந்திய ஜனாதிபதித் தேர்தலின் போது திருமதி இந்திராகாந்தி என்பெயரை பிரேரித்து என்னை தேர்தலில் நிறுத்தி இறுதியில் காலை வாரிவிட்டார்''

இவ்வாறு முன்னாள் சபாநாயகரும், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு தோற்கடிக்கப் பட்டவருமான திரு. சஞ்சீவரெட்டிகூறினார்.

சிண்டிக்கேட்ஆதரவு காங்கிரஸ் ஆட்சி மன்ற உறுப்பினர்கள் காங்கிரஸ் தலைவர் திரு நிஜலிங்கப்பா வீட்டில் கூடி ஆட்சிமன்ற காங்கிரஸ் கட்சியின் தலைவராக மொரார்ஜி தேசாயை தேர்ந்தெடுத்தார்கள் அக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே திரு. சஞ்சீவரெட்டி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''வெளிநாட்டுப் பயணத்தை நான் முடித்துக் கொண்டு நாடுதிரும்பியதும் என்னை சிண்டிக்கேட் வேட்பாளர் என்று கூறப்படுவதைக் கேட்டு ஆச்சரியப்பட்டேன். சோஷலிசம் என்றால் ஏழைகளுக்காக என்று அர்த்தமா? அரசியல் அதிகாரத்துக்காக என்று அர்த்தமா? இந்திரா கம்யூனிஸ்டுகளைப் பற்றி நிற்பது குறித்து நான் அவரை எச்சரிக்கிறேன்.

தன்னுடைய அரசியல் எதிரிகளைவீழ்த்த சோஷலிச கோஷத்தை பிரதமர் இந்திரா பயன்படுத்தக்கூடாது' என்று திரு. சஞ்சீவரெட்டி மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

## வாக்காளர் அதிகரிப்பு

கோட்டை, வியா

கொழும்பு மாநகரசபை வாக்காளர்கள்தொகை இம்முறை 19,617-ஆல் கூடியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 1965ம் ஆண்டில் 233,408-ஆக இருந்த வாக்காளர் தொகை இன்று 253,025 ஆக அதிகரித்துள்ளது.

நகரின் கூடிய சனத்தொகையைக் கொண்டவட்டாரமாக குருளைப் பகுதியுள்ளது. இங்கு 6903 பேர் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

## அதிகரிக்கும்

பருத்தித்துறை, வியா

கடந்த சில நாட்களாகப் பெய்துவரும் மழையைத் தொடர்ந்து வல்லிபுரம், கட்டைவேலி, கரவெட்டிப் பகுதிகளிலுள்ள விவசாயிகள் வயல்களுக்கு அரசாங்கத்தால் விநியோகிக்கப்பட்ட உரம் போடுவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் இவ் வாண்டு விளைச்சல் அதிகமாக இருக்குமென்றும், எதிர்பார்த்ததிலும் பார்க்கக் கூடுதலான சாகுபடி பெறப்படுமென்றும் கரவெட்டி பயிர்ச்செய்கைக் குழுச் செயலாளர் திரு. சி. மு. மார்க்கண்டு அபிப்பிராயம் தெரிவித்தார். உரம் மட்டுமன்றி, புதுவகை நெற்கள், புதிய விஞ்ஞானமுறைகள் கையாளப்பட்டமையும் செழிப்பான மழையும் கூடுதலான அறுவடைக்கு சாதகமாயிருக்குமென நம்பப்படுகிறது. கரவெட்டி கிழக்குப் பகுதியில் சவர் நிலத்தில் பரீட்சார்த்தமாகப் பயிரிடப்பட்ட நெல் எதிர்பார்த்ததிலும் சிறப்பாகச் செழித்து வளர்வதாகவும் தெரிகிறது.

சபை சனசமூக நிலைய மென்பந்தாட்டக் கழகத்துக்கும், மன்னார் பொலிஸ் கோஷ்டிக்குமிடையே இப் போட்டி நடந்தது.

மன்னார் பட்டினசபை சனசமூக நிலைய மென்பந்தாட்டக் கழகம் வெற்றியீட்டி நாகராஜா வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இச் சுற்றுப் போட்டியை மன்னார் காரியாதிகாரி திரு. கே. தயாபரனும், மன்னார் காரியாதிகாரி பிரிவு விளையாட்டு உத்தியோகஸ்தர் திரு. ஏ. ரி. டி. சின்னத்தம்பியும் ஒழுங்கு செய்திருந்தனர். மன்னார் முற்ற வெளி மைதானத்தில் இப் போட்டி நடைபெற்றது.

## தீபாவளிப் பரிசு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம், கே. கே. எஸ். றோட், செ. காசிப்பிள்ளை அன் கோ. ஸ்தாபனத்தார் தீபாவளியின் போது நடத்திய மலிவு விற்பனையில் முதல் இரண்டு பரிசுகளையும் முறையே பின்வருவோர் பெற்றனர்

திருமதி எஸ். ஏ. வெற்றிவேல், யாழ்ப்பாணம், திரு. எஸ். இராஜேந்திரன், யாழ்ப்பாணம்.

## கோப்பாயில் மரம் நாட்டு விழா

கோப்பாய், வியாழன்

கோப்பாய்ப் பகுதியில் மரம்நாட்டு விழா கடந்த ஒரு வார காலமாக நடைபெற்றுவருகிறது.

வலி. கிழக்குக் காரியாதிகாரி திரு வி. கந்தப்பிள்ளை தலைமையில் நடைபெற்றுவரும் இவ்விழாவில் அவ்வப்பகுதி சன சமூக நிலையங்கள் பயிர்ச்செய்கைக் குழுக்கள், விவசாயக் கழகங்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் பங்குபற்றி வருகின்றனர்.

கோப்பாய் உப்பாற்றங் கரையில் சுமார் அரைமைல் நீளத்தில் பனை, இலுப்பை முதலிய மரங்கள் நாட்டப்பட்டன.

## காலத்தால் அழியாதவை

வெள்ளவத்தை, வியா

''திருவள்ளுவர் சகல மக்களுக்கும் பொதுவான கருத்துக்களை மத வேறுபாடின்றிச் சொல்லி வைத்துள்ளார். அவை காலத்தால் அழியாதவை. அவை அனைத்தும் உண்மைகள், உண்மை என்றும் வாழும்'' என உணுப்பிட்டியில் நடைபெற்ற திருவள்ளுவர் தினவிழாவுக்குத் தலைமைவகித்துப் பேசிய திரு. வே. சுப்பிரமணிய சர்மா கூறினார்.

ளது. இந்தக் கிளர்ச்சியின் ஒரு பகுதியாக அறநிலைய பாதுகாப்பு இலாகா முன்பு உண்ணாவிரத முமிருக்க அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

0 0 0

## பஸ் வண்டி தொங்கியது

பிரயாணிகள் இல்லாமல் வெறுமனே சென்று கொண்டிருந்த அரசாங்க பஸ் வண்டியொன்று சேப்பாக்கத்தில் உள்ள வாலாஜா கேட் பாலச்சுவரில் மோதிக் கொண்டு அப்பாலத்தில் அந்தரத்தில் தொங்கியது. பஸ் பிரேக் பிடிக்காததே இவ் விபத்துக்குக் காரணமெனக் கூறப்படுகின்றது.

0 0 0

## தற்கொலை

மகாபலிபுரம் கடலில்

ட்டு இது போன்ற திருத்தங்களை பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தில் செய்ய வேண்டியதவசியம் எனவும் தெரிவித்துள்ளார்,

## ஒரு மறுப்பு

வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்கப் பாடசாலையிலே ஒரு மாணவ ஆசியர் பற்றி சென்ற 11-ந் திகதி 'ஈழநாட்டில்' வெளியான ஒரு செய்தி தவறானதென்று சம்பந்தப்பட்ட ஆசிரியர் மறுக்கிறார். சமயசம்பந்தமான வேற்றுமை உணர்ச்சியே இதற்குக் காரணமென்றும், இதுபற்றி கல்விப்பகுதியினர் நடத்திய விசாரணையில் அவ்வாசிரியரின் வேண்டுகோளுக்கிணங்க ஓர் இந்து கலவன் பாடசாலைக்கு அவர் மாற்றப்பட்டுள்ள தாகவும், தெரிவிக்கின்றார்.


தற்பொழுது அச்சில்...

ஏராளமான தகவல்கள்

நவீன அமைப்பு

ஈழநாடு

**தினக் குறிப்புகள்**

**1970**

★ ஈழநாடு POCKET DIARY
(one week to an opening) 75 சதம்

★ ஈழநாடு மாணவர் தினக்குறிப்பு
ரூபா 1-15 சதம்

★ ஈழநாடு தினக்குறிப்பு
(வழமையானது) ரூபா 1-35 சதம்

'ஈழநாடு' பத்திரிகை ஏஜண்டுகளுக்கும் வியாபாரிகளுக்கும் விசேஷ கழிவுகள் தரப்படும்.

விபரங்களுக்கு:

தினக் குறிப்பு 1970,
த. பெ. எண். 49,
ஈழநாடு,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

மனிதன் என்றால், வெறும் அறிவுமாத்திரமல்ல; அல்லது ஸ்தூல உடலோ, உணர்ச்சியோ அல்ல. அறிவு, உடல்உணர்ச்சி ஆகிய மூன்றும் அழகிய முறையிலே ஒன்று கூடினால்தான் மனிதன் ஆகிறான்.

— மகாத்மா காந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49. Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் கார்த்திகை மாதம் 6-ந் திகதி (21-11-69)


## சந்திர யாத்திரை

சந்திரமண்ணில் மீண்டும் மனிதன் கால்வைத்து நடந்து உலக வரலாற்றில் மற்றோர் அத்தியாயத்தை உருவாக்கியிருக்கிறான். மனிதனின் கற்பனைப் பொருளாகக் காட்சியளித்துவந்த சந்திரனில் சுமார் நான்கு மாதங்களுக்கு முன் அதாவது சென்ற ஜூலை மாதத்தில்தான் மனிதன் முதல் முதலில் அடிஎடுத்துவைத்து உலக வரலாற்றையே மாற்றி அமைத்து மகத்தான சாதனையைநிலைநாட்டிப் பெருமையடைந்தான். நான்கு மாதங்களில் இரண்டாவது சந்திரப்பிரயாணமும் வெற்றிகரமாக நிறைவேறியிருக்கிறது இத்துடன் அமெரிக்காவின் சந்திரப்பிரயாணத் திட்டம் முடிந்துவிடாது. 1972-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் அப்பல்லோ - 20 சந்திரனைநோக்கிச் செல்வதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதற்குள் வேறு பல அப்பல்லோக்கள் அங்கு செல்வதற்கிருக்கின்றன. 1972-ம் ஆண்டில் சந்திரப் பிரயாணம் சாதாரண (அதாவது ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்குப் பயணம் செய்வதைப் போல) விஷயமாகவும் கூடும்.

எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் அப்போது அமெரிக்க ஜனாதிபதியாகவிருந்த திரு. ஜோன் எப். கென்னடி, சந்திரனில் மனிதனை இறக்க முன்வாருங்கள் என்று அமெரிக்க மக்களுக்கு சவால்விடுத்தார். அந்த சவாலை ஏற்று இன்று அவர்கள் சந்திரனைச் சாடி வெற்றியீட்டிக்கொடுத்திருக்கின்றனர்.

சந்திரனைச் சாடும் போட்டியில் அமெரிக்கா வெற்றியீட்டி இதர வல்லரசுகளை வெகுதூரம் பின்தங்கிநிற்கச்செய்துவிட்டது. இதனால் உலகில் அமெரிக்கா பெரும் புகழை ஈட்டியுள்ளது. அதன் செல்வாக்கும் மதிப்பும் உயர்ந்துள்ளது இதை யாரும் மறுக்கமுடியாது. கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு இவ் வெற்றிகொண்டுள்ளதால் மனிதகுலத்துக்கு என்ன பயன், என்ன இலாபம்? ஓர் அப்பல்லோவை சந்திரனுக்கு அனுப்புவதற்கு செலவிடும் பணத்தில் உலகில் கோடிக்கணக்கான மக்கள் வயிறாரஉணவுண்டு மகிழ்ச்சியுடன் வாழமுடியுமே என்று பலரும் கேட்கிறார்கள்; கேட்பதில் நியாயமுண்டு. சந்திரனைக்கொண்டு மனிதகுலம் நன்மைபெற முடியுமா, பயனடையமுடியுமா என்பதுஇனித்தான்தெரியும் என்றாலும் சந்திரபிரயாணத்தில் வெற்றிகொண்டுள்ள அமெரிக்கா தனது செல்வாக்கையும் கீர்த்தியையும் மனிதகுலத்தின் நன்மைக்குப் பயன்படுத்த முன்வருமென்று நம்புவோம்.

சந்திரனைச் சாடியதில் விஞ்ஞானத்துக்கும்தொழில்நுட்பத்துக்கும், விநாடி தவறாத கணிப்புக்கும் கிடைத்த வெற்றிமட்டுமல்ல, இனம், மதம், மொழி, பிரதேசம் என்ற குறுகிய நோக்கம் கொண்டு அரசியல் ஆதாயம் பெறுவதற்காக குறுகியவழிகளை நாடும் அரசியல்வாதிகளுக்கும் சந்திரனைச் சாடிய சாதனை உலகம் மட்டுமல்ல, இதர மண்டலப் கூட ஒரு குடும்பமாகும் காலம் உருவாகிக்கொண்டிருக்கிறதெனச் சவால் விடுவதாக அமைந்துள்ளது. இந்தவகையிலும் அமெரிக்கா வழிகாட்டவேண்டும். ஏனெனில் அங்கும் நிறபேத பிரச்னைகளும் இருக்கின்றன.

## மாணவர் வாக்குறுதி

சுமார் ஒருமாதகாலம் மூடப்பட்டுக்கிடந்த பின், பேராதனைப் பல்கலைக்கழகம் நேற்று முன்தினம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக விதிமுறைப்படி நடப்பதாக ஸ்தலங்களும் அங்கு அமைக்கப்பட்டுள்ளன. அவற்றைத்தக்கப்டிபயன்படுத்தினால் மாணவர்கள் நெறிதவறாமல் உறுதியுடன் இருக்கவும், தாங்கள் விரும்பிய பலனைப்

### சர்வோதய யாத்திரைக் கடிதம்: 3

# 'இலங்கையில் இராவணர் சந்ததி உண்டா?'

நான் அதிகாலை நான்கு மணிவரையில் மைலாப்பூர் குன்றக்குடிமடத்தில் நீராடிவிட்டு கற்பகாம்பாள் கபாலீஸ்வரர் தரிசனம் செய்தேன். சுமார் ஐந்து முப்பது வரையில் குன்றக்குடியில் இருந்து தவத்திரு குன்றக்குடி அடிகளார் தொலைபேசியில் அழைத்துப் பேசினார்கள். சுகமாகப் போய் வருமாறு ஆசியும் கூறினார்கள். 'தமிழ்நாட்டுப் பத்திரிகைகளில் யாழ்ப்பாணத் கூட்டத்தில் நஞ்சு கொடுத்ததாக வெளிவந்த செய்தியைத் தாங்கள் ஒப்புக்கொண்டதாகச் செய்திகள் வெளிவந்துள்ளனவே' என்று கேட்டேன். 'அவை பொய்ச்செய்தி' என அடிகளார் கூறித் தாம் முதலியாளர் செ. சின்னத்தம்பி அவர்களுக்குக் கடிதம் எழுதுவதாகவும் தெரிவித்தார்.

பின்பு நான் பிரயாணத்தைத் தொடங்கினேன். திருமடத்துப் பொறுப்பாளர் திரு. மூர்த்தி அவர்கள் என்னை வழியனுப்பி வைத்தார்கள். நல்ல மழை பெய்துகொண்டிருந்தது.

பஸ்ஸில் ஏறி சென்ரல் புகையிரத நிலயத்துக்குப் புறப்பட்டோம். வழியில் மயிலாப்பூர் சந்தியில் திருவள்ளுவர் சிலையைக் கண்டதும் என் மனதில் ஒரு முறைப்பாடு செய்தேன் வள்ளுவப்பெருமானே உங்கள் 'பெயக்கண்டும் நஞ்சுண்டு...' என்ற திருக்குறளை யாழ்ப்பாணத்திலே ஒரு கூட்டத்தில் குன்றக்குடி அடிகளார் கதை சொல்லி விளங்கவைத்தார். ஆனால் அக்கதை அடிகளாருக்கு நஞ்சு கொடுத்ததென்ற ஒரு உண்மைக் கதையாக முடிந்து, ஈழத்தையும் தமிழகத்தையும் கலக்கிவிட்டதே என்று கூறினேன்'

வள்ளுவப் பெருமானார் கூறியதாவது:-

விளக்கம் சரிதான், அந்த விளக்கத்தை நன்கு புரியாமல் கொடுத்த செய்திதான் நஞ்சாகியது. 'ஆய்ந்தோய்ந்து பாராதான் கேண்மை...' என்ற திருக்குறளையும் ஞாபகமூட்டினார்.

நானும் சரியென்று எண்ணிக்கொண்டு அப்பால் சென்றேன். சாதாரண மழை பெருமழையாகியது. உருத்திரபுரத்தில் இந்த மழைபெய்தால் ... என்ற எண்ண அலைகள் வளர்ந்தன. பஸ் சென்ரல் புகையிரத நிலயத்தையடைந்ததும் இறங்கிறேன். எனது சூட்கேஸுடன் புகையிரத நிலயத்தினுள் நுழைந்து நான் பிரயாணம் செய்ய வேண்டிய 'கௌரா-ஜனதா' வண்டி நிற்கவேண்டிய பிளாற்போமை நோக்கிச் சென்றேன். முதல் நாள் கிடைத்த புதுநண்பர் இராமச்சந்திரனும் வந்து சேர்ந்தார். அவருடன் சென்றுகொண்டிருக்கும் போது சர்வோதய மாநாட்டுக்காகப் பீகார் செல்லும், கேரளத்திலிருந்துவந்த ஆண்களும், பெண்களுமாக எங்களைச் சந்தித்தார்கள். இவர்களில் அன்பர் செல்லப்பன் நாயகர் தமிழ் பேசக்கூடியவர். 15 நிமிட நேரத்தில் 'கௌரா-ஜனதா' வண்டிவந்தது. நாங்கள் எல்லோரும் வண்டியில் ஏறி அவரவர் பெயருக்குரிய பதிவுசெய்யப்பட்ட இடத்தில் அமர்ந்தோம்.

## பாலில் நஞ்சுபற்றிய செய்தி குறித்து அடிகளார் மறுப்பு

மழையோ பெருமழையாகக் கொட்டியது. வண்டி நகரத் தொடங்கியது. புது நண்பர் செல்லப்பன்நாயர், நம் பக்கம் வந்து தமிழில் பேசினார்.

நான் தமிழைவிட வேறு மொழி தெரியாத குறையுடையவனாயிற்றே.

நண்பர் இராமச்சந்திரனுக்கு இந்தியும், ஆங்கிலமும் மேலதிக மொழிகளாகத் தெரியும். நண்பர்

**— சி. க. வேலாயுதபிள்ளை —**

நாயர் இலங்கை வளம் பற்றியும், இராமயணத்துச் செய்திகள் பற்றியும் பேசினார். அனுமார் பற்றி அதிகமாகப் பேசினார். அனுமானுடைய தொண்டுள்ளம் தன்னை மிகமிக கவர்ந்ததென்றும். அதனால் தமக்கு அனுமானிடத்தில் மிகுந்த பற்று உண்டென்றும் கூறி இலங்கையில் அனுமார் கோவில்கள், அனுமார் வழிபாடு, அனுமார் பற்றிய அடையாள பற்றி எல்லாம் ஆராய்வான கேள்விகளைக் கேட்டார். இராமாயண காலத்துக்குரிய சான்றுகள் சின்னங்கள் உண்டா என்றெல்லாம் பலபல வினாக்களை வீசி என்னைத்திணற வைத்தார்.

சமயோசிதமாக இயன்ற பதில் கூறித் தப்பிக்கொண்டேன். கடைசியில் இராவணனுடைய சந்ததியினர் யாரும் உ[illegible] கேட்டு என[illegible]

'நான் அசுர குணமுடையோர் உண்டு. அதனைல் இன்னும் தீண்டாமை முதலிய ஏற்றத்தாழ்வுகள் என்நாட்டில் நிலவுகின்றன. இத்தகைய அசுர குணமுடையோர் சைவர்களென்றும், சாதுக்களென்றும், பூசகர்களென்றும், தங்களை அழைத்துக்கொள்ளுகின்றார்கள்'' என்று கூறி சாதாரண ம[illegible]தப்பண்புகளற்ற முரட்டுக் குணமுடையவர்களை அசுர குணமுடைய இராட்சதர்கள் இராவணன் சந்ததியினராக இருக்கலாமெனக் கூறினேன். தாம் இலங்கை வந்து பார்க்கவேண்டும் என்று கூறிவிட்டுத் தமது இருப்பிடம் சென்றார்

''கௌரா ஜனதா'' வேகமாகச் செல்லுகின்றது இரு பக்கமும் எட்டிப்பார்த்தால் ஒரேவெள்ளக்காடு சென்னையிலிருந்து சுமார் 2 மணித்தியாலம் ஜனதா ஓடிவிட்டது. ஓரிடத்தில் வானளாவிய புகைபோக்கியிலிருந்து ஆகாயத்தில் நெருப்புப் பிழம்புதெரிந்தது'' அது என்ன என்று'' விசாரித்த போது அந்த இடம் எண்ணெய் சுத்திகரிப்பு சாலையென அறிந்தேன். தொடர்ந்து பல தொழிற்சாலைகள் கண்ணுக்குத் தெரிந்தன. மாலை நேரம் தமிழகத்தைப் பிரிந்தோம்.

ஆந்திரப் பிரதேசம் வந்தது எங்கும் பசுமையான காட்சி ஆனால் ஏழ்மைக் குடிசைகளும் சுகாதாரக் கேடான சூழ்நிலைகளும் மாறிய பாடில்லை.

இரவு நாம் அனைவரும் தூங்கினோம் அதிகாலை நாலு மணியிருக்கும், ஒரு பஜனை நடந்தது எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு திருநீறுதரித்துக் கொண்டு அந்தப்புகை வண்டியில் பஜனை நடக்கும் இடம் சென்றேன்.

என்னை மிகுந்த அன்போடு வரவேற்றார் செல்லப்ப நாயர். அந்த காந்தி பஜனை மலையாளத்தில் நடந்தது. கேட்க காதுக்கு மிகுந்த இன்பமாக விருந்தது ஐந்து ஆறு மலையாள சகோதரிகள் சேர்ந்து மிக அற்புதமாக சபரிமலை ஐயப்பன் மீது தோத்திரங்களைப் பாடிக் கொண்டிருந்தார்கள் அந்தப் பெட்டியிலிருந்த அத்தனை பேரும் நெருக்கியடித்து குவிந்து விட்டார்கள்.

ஓர சர்வோதய பக்தர்கள் கூட்டமல்லவா? தெலுங்கு அன்பர்கள் தாம் சளைத்தவர்கள் அல்லர் என்பதைக் காட்டும் முகமாக தோத்திரங்களைப் பாடினார்கள். இலங்கையும் பாட வேண்டும் என்ற குரல் கேரள நண்பர்கள் கூட்டத்திலிருந்து வந்தது. நாம் தேவாரங்களும் திருவாசகங்களும், திருத்தணி மீதுள்ள விருத்தமும் பாடினோம் கன்னட நண்பர்களும் பாடத்தொடங்கினார்கள் பின்பு எல்லோரும் சேர்ந்து காப்தி பஜனை ''ரகுபதி ராகவ...'' பாடினோம் எவ்வளவு ஆனந்தம் ஒரு பெரிய பாலம் வந்தது அன்னை கிருஷ்ண(நதி) வேகமாக ஓடிக் கொண்டிருந்தாள். அந்தப்புண்ணிய நதியில் மூழ்கி தீர்த்தமாடியதாக மனதில் கற்பனை செய்து கொண்டேன். ஜனதா வண்டி மெல்ல ஒரிஸாமாகாணத்துள் பிரவேசித்தது பாதையோரங்களில் ஏழ்மை தாண்டவமாடியது பல பெண்கள் செடிமறைவில் நின்று கொண்டே வண்டிசெல்வதைப் பார்த்தனர். காரணம் அவர்களது உடைகுறைவேயாகும். பல பெண்கள் ஒழுங்காக மேலாடையின்றிக் காணப்பட்டனர்.

சிறிது நேரத்தில் புவனேசுரம் வந்தது. இங்கு தானே நேருஜி நோய்வாய்ப்பட்டார் பின்னர் பூரி ஜகன்நாதரை மனதில் தியானித்து வழி பட்டேன் இங்கு சங்கரர் மடம் ஒன்று உள்ளது. ஒரு இடத்தில் எங்கள் வண்டி நின்றது. பின் விசாரித்த பொழுது யாரோ ஒருவர் புகையிரத பாதையில் அடிபட்டு இறந்து விட்டதாகத் தெரிய வந்தது மாலை நேரமாயிற்று, பல ஒரிஸா சர்வோதய அன்பர்கள் எங்கள்வண்டியில் ஏறிக்கொண்டார்கள் இரவுகழுய மேற்கு வங்காளத்தில் எங்கள் வண்டி நுழைந்தது அதிகாலை முதல் நாள் போல் சர்வோதய பஜனை நடந்தது நாம் புகையிரதத்திலேயே குளித்து உடைகளை மாற்றிக்கொண்டோம் எங்கள் கௌரா ஜனதா கல்கட்தா சேர்ந்தது.

# ஜயாறன் எழுதுவது..

புதுடில்லியிலே 'சின்டிகேட்' காங்கிரஸ் தலைவர்கள் சென்ற ஞாயிறன்று மாலை கூடி ஆட்சிமன்றத்திலே, தங்கள் புதிய கட்சி நிர்வாகிகளை நியமிப்பதைப் பற்றி ஆலோசனை செய்தனர்.

ஞாயிறு மாலை 4-30 முதல் 6 மணிவரை ராகுகாலம். ஆகவே ராகுகாலம் முடியும் வரை புதிய நிர்வாகிகளின் பெயர்களை அறிவிக்காமல், அரை மணி நேரத்துக்கு அந்த அறிவிப்பை ஒத்தி வைத்திருப்பதாகத் தலைவர் நிஜலிங்கப்பா தெரிவித்தார்.

'சின்டிகேட்' தலைவர்கள் ராகுகாலம் முதலியவற்றைப் பார்க்கையில் 'இன்டிகேட்' (இந்திரா கோஷ்டியினர்) தலைவர்களுக்கு இவற்றில் நம்பிக்கையுண்டா என்பது தெரியவில்லை. அநேகமாக இராதென்றே கொள்ளலாம்.

இராகுகாலம் முடிந்த பின் புதிய நிர்வாகிகளின் பெயர்களை அறிவித்துள்ளதால், அவர்களது எதிர்காலம் வெற்றிகரமாக இருக்குமென்பதே சின்டிகேட்டின் நம்பிக்கை.

0 0 0

ஆனால் ஒரு விஷயம். புதிய நிர்வாகிகளைப்பற்றி 'சின்டிகேட்' தலைவர்கள் ஆலோசனைகள் நடத்தித் தீர்மானித்தது, ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணி வரையில். அதாவது ராகு காலத்தில். ராகு காலத்திலே நல்லகாரியம்செய்யப்படாதென்று நம்பிக்கையிருந்தால் இவ் விஷயத்தைப்பற்றி ஆராயவோ, அல்லது ஒரு தீர்மானத்துக்கு வந்திருக்கவோ கூடாது. ராகுகாலத்தின் பலன், அச்சமயம் நடந்த விவாதத்தையும் தீர்மானத்தையும் தாக்கியிருக்கலாமல்லவா?

அறிவிப்பை மட்டும்அரை மணி நேரத்துக்கு ஒத்தி வைத்துவிட்டதால், ராகு காலத்திலிருந்து தப்பிவிட்டதாக அத்தலைவர்கள் கருதுவதாயின் அது தங்களையே ஏமாற்றிக் கொள்வதாகாதா? ராகுகாலத்தைப் பற்றிய நம்பிக்கையிருந்தால் அந்த ஒன்றரை மணி நேரமும் வேறு ஒன்றும் செய்யாமல் தெய்வபிரார்த்தனையில் ஈடுபட்டிருப்பதே உத்தமம் ஆனால் மகாத்மாவுக்குப்பின் காங்கிரஸிலே யார் நம்பிக்கையுடன் பிரார்த்தனை செய்கிறார்கள்?

தெய்வத்தையே நம்பி, கூட்டுப்பிரார்த்தனைகள் நடத்தி, நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்தார் மகாத்மா. ஆனால் அவரைப் பின்பற்றுவதாகச் சொல்லும் தலைவர்களில் எவ்வளவுபேருக்கு தெய்வத்திலும், பிரார்த்தனையிலும் உண்மையான நம்பிக்கை உள்ளது

காங்கிரஸ் கூட்டம் ஆரம்பிக்கையிலே மௌன பிரார்த்தனையை எல்லாரும் சேர்ந்து நின்று செய்வதாயின், இந்தச் சங்கடங்களெல்லாம் ஏற்படாமல் தடைபட்டிருக்கக் கூடும் எல்லாரையும் ஒன்றுபடுத்தக்கூடிய பெரிய சக்தியான கடவுளைப் பகிஷ்கரித்துவிட்டால், மனஒற்றுமை எப்படி ஏற்பட முடியும்?

0 0 0

''சந்திரனுக்கும் பிறமண்டலங்களுக்கும் ஆட்களை அனுப்புகிற அமெரிக்காவும் ருஷ்யாவும், இறந்தபின் வாழ்கின்ற ஆவி உடம்பைப் பார்க்கவும், ஆவிகள் பேசுவதைக் கேட்கவும், கூடிய கருவியை என்று கண்டு பிடிக்கிறார்களோ, அன்று தான் உலகம் அனைத்தும் இதை ஒப்புக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அன்று தான், ஒன்றே குலம் ஒருவனே தேவன், எல்லோரும் அம்மையப்பனுகிய ஆண்டவனின் குழந்தைகளுமாவர். பாரமுள்ள இந்த உடம்புக்குத்தான் வெவ்வேறு பெற்றோர்களும், நிறமும், குலமும், தாய்ப் பாஷையும். ஆவி உடம்புகளுக்கு எல்லாம் ஒரே அம்மையப்பன்தான். அதற்குப் பாஸ்போர்ட் தடைகளும், என் நாடு, உன் நாடு என்ற தடைகளும் கிடையாது என்ற உண்மையும் புலனாகும்.'' மதுரை குருமகாசந்நிதானம்.

0 0 0

பந்தித்த பாவங்கள் அம்மையிற் செய்தன இம்மை வந்து, சந்தித்தபின்னைச் சமழ்ப்பதென்னே வந்த மரர் முன்னான், முந்திச் செழுமலரிட்டு முடி தாழ்த்தடி வணங்கும், நந்திக்கு முந்துறவாட் செய்கிலா விட்ட நன்னெஞ்சமே.

— அப்பர் அடிகள்

# இராஜசபையின் முன்னுள்

[illegible]லட் ஆல்வா

# பூநகரி - மன்னார் பஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் வாக்குறுதி

சுமார் ஒருமாதகாலம் மூடப்பட்டுக்கிடந்த பின், பேராதனைப் பல்கலைக்கழகம் நேற்று முன்தினம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக விதி முறைப்படி நடப்பதாக அநேகமான 3500 மாணவ மாணவியரும் எழுத்து மூலம் வாக்குறுதி அளித்துள்ளது வரவேற்கத்தக்கதாகும். இனி அங்கு அசம்பாவிதங்கள் ஏற்படாதென்றே நம்புவோம்.

மாணவர்களுக்கு அங்கு குறைகளுண்டென்பது உண்மை. அவற்றை இருதரப்பினரும் சந்தித்துப் பேசித்தீர்த்துக் கொள்ள வழிவகைகள் செய்யப்படின் மீண்டும் அவ்வித சங்கடங்கள் ஏற்படாமல் தடுக்கமுடியும். ஆனால் வெளியிலுள்ள சில சுயநல அரசியல் சக்திகள் பல்கலைக்கழக மாணவர்களைத் தூண்டிவிட்டு சிறிய விஷயத்தையும் பெரிதாக்கி, நெருக்கடிகளை ஏற்படுத்துவது பகிரங்க ரகசியம். மாணவர்களில் சிலர் இதற்குப்பலியாகி தங்கள் எதிர்காலத்தைக் கெடுத்துக் கொள்வதுடன் பல்கலைக்கழகமும் சீராக நடைபெற முடியாமல் தடுக்கிறார்கள். வெளியார்கள் இவ்விதம் குறுக்கிட்டு விஷமம் செய்யாமல் கண்டிப்பாகப் பார்த்துக்கொண்டாலே மீண்டும் அங்கு அவ்வித துரதிருஷ்ட சம்பவங்கள் ஏற்படாமல் இருக்கும்.

பல்கலைக்கழக மாணவர்களின் முதல் கடமை, படித்து, பல துறைகளிலும் அறிவைப்பெறுவதே, அரசியல் பற்றிய அறிவைப் பெறலாமேயன்றி, அரசியல்கட்சி வேற்றுமைகளில் ஈடுபட்டு தங்கள் படிப்பை சீர் குலைத்துக் கொள்ளுவது கூடாது. ஒருமாதம் பல்கலைக்கழகம் மூடப்பட்டதால் நஷ்டப்பட்டவர்கள், அங்கு பயிலும் மாணவமாணவிகளே. இனி நிர்வாகிகளுக்கும் மாணவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதின் மூலம், அவ்வித அசம்பாவிதங்கள் ஏற்படாமல் தடுத்துக் கொள்ளலாம். மாணவர்களுக்கு நல்லறிவு ஏற்படவே பலசமய வழிபாடு ஸ்தலங்களும் அங்கு அமைக்கப்பட்டுள்ளன. அவற்றைத்தக்கப்டிபயன்படுத்தினால் மாணவர்கள் நெறிதவறாமல் உறுதியுடன் இருக்கவும், தாங்கள் விரும்பிய பலனைப் பெறவும் முடியும்.

## தீவுப்பகுதிச் செய்திகள்

### வெங்காயச் செய்கை பாதிக்கப்படலாம்

வேலணை, வியா.

இப்பகுதியில் பெய்து கொண்டிருக்கும் பெருமழை காரணமாக எங்கு பார்த்தாலும் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கிறது. தொடர்ந்து மழை பெய்தால் இப்பகுதியில் வெங்காயச் செய்கை பெரிதும் பாதிக்கும் அறிகுறி தென்படுகிறது.

0 0

### நிர்வாகசபைக் கூட்டம்

வேலணை கலைமகள் சனசமூக நிலைய நிர்வாக சபை கூட்டம் தலைவர் ப. அரசரத்தினம் தலைமையில் நடைபெற்றது. மூன்று கூட்டங்களுக்குச் சமூகமளிக்காத உறுப்பினரின் இடங்களுக்குப் புதிய உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டதையடுத்து நிதி பற்றி ஆராயப்பட்டதுடன், தயாரிக்கப்பட்டுள்ள உப விதிகளை பொதுச் சபையின் அங்கீகாரத்திற்கு விடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது,

0 0 0

### தமிழரசு வா. மு.

கரம்பன் கிழக்கு தமிழரசு வாலிபமுன்னணிஉறுப்பினர்களாகப்பின்வருவோர் தெரியப்பட்டனர்.

தலைவர்: திரு. ச. நீக்கிலாசு, துணைத்தலைவர்: திரு. ஏ பிரபாகரன், செயலாளர்: திரு. சோ. கதிர்காமநாதன், துணைச்செயலாளர்: திரு. ஏ. கந்தசாமி, பொருளாளர்: திரு. க. சண்முகராசா மற்றும் 7 உறுப்பினரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


மழை பெருமழையாகியது. உருத்திரபுரத்தில் இந்த மழைபெய்தால் ... என்ற எண்ண அலைகள் வளர்ந்தன. பஸ் சென்றல் புகையிரத நிலையத்தையடைந்ததும் இறங்கிறேன். எனது சூட்கேஸுடன் புகையிரத

களை வீசி என்னைத்திணற வைத்தார்.

சமயோசிதமாக இயன்ற பதில் கூறித் தப்பிக்கொண்டேன். கடைசியில் இராவணனுடைய சந்ததியினர் யாரும் உண்டா எனக் கேட்டு என்னைக்கலக்கினார்.

## ஐ. நா. மகாசபையில் வைஜயந்தியின் நடனம்

### யுதாண்ட் அழைத்திருக்கிறார்



புதுடில்லி, நவ. 20

ஐ. நா. சபையில் பிரபல தமிழ் நடிகையும், நாட்டிய ரமணியுமான வைஜயந்திமாலா நாட்டியமாடவிருக்கிறார்.

ஐ. நா. மகாசபை தோன்றிய 21-வது விழா அடுத்த மாதம் ஆரம்பமாகும்போது. அவர் மகாசபையில் தமது நாட்டிய நிகழ்ச்சியொன்றை நிகழ்த்துவார்.

மகாசபையில் நிகழ்ச்சியொன்றை நிகழ்த்த வரும்படி ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் வைஜயந்திமாலாவுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்.

இந்தத் தகவலை நடிகை வைஜயந்திமாலா நேற்று பத்திரிகை நிருபர்களிடம் வெளியிட்டார்.

வைஜயந்திமாலா ஐ. நா. மகாசபை அங்கத்தவர்கள் முன் தமது நிகழ்ச்சியை நடத்திய பின்னர் தமது குழுவைச் சேர்ந்த ஏழு அங்கத்தவர்களுடன் அமெரிக்கா, கனடா, மேற்கிந்தியா ஆகிய நாடுகளிலும் நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்துவார்.

மலையாளத்தில் நடந்தது. கேட்க காதுக்கு மிகுந்த இன்பமாக விருந்தது ஐந்து ஆறு மலையாள சகோதரிகள் சேர்ந்து மிக அற்புதமாக

நாம் புகையிரதத்திலேயே குளித்து உடைகளை மாற்றிக்கொண்டோம் எங்கள் கௌரா ஜனதா கல்கட்டா சேர்ந்தது.

திருமதி வயலட்ஆல்வா

## ராஜ்யசபையின் முன்னாள் துணைத்தலைவர் காலமானார்

### பிரதமர் இந்திரா கவலை

புதுடில்லி, நவ. 20

இந்திய ராஜ்யசபையின் முன்னாள் துணைத்தலைவர் திருமதி வயலட் ஆல்வா இன்றுகாலையில் காலமானார்.

திருமதி ஆல்வா கடந்த வாரம் தான்தமது துணைத் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்தார்.

திருமதி ஆல்வா காலமானார் என்ற செய்தி கிடைத்தவுடன் இன்று பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியும் ராஜ்ய சபையின் தலைவரும் துணை ஜனாதிபதியுமான திரு. பாட்டக்கும் அவரது இல்லத்துக்கு சென்றார்கள்.

இன்று காலையில் கூடிய ராஜ்யசபையும், லோக் சபையும் திருமதி ஆல்வாவுக்கு அஞ்சலிசெலுத்தி அலுவல்களை ஒத்திவைத்தன

திருமதி ஆல்வா நேற்றிரவு திடீரென்று சுகவீனமுற்றார். இன்று காலையில் 7-45 மணிக்கு அவர் உயிர் பிரிந்தது அவருக்குவயது 61. ராஜ்யசபையில் அவர் 7 ஆண்டுகள் தொடர்பாக அங்கத்தவராக இருந்து வந்திருக்கிறார். 1962-ல் அவர்ராஜ்யசபைக்குதெரிவு செய்யப்பட்டார். அதிலிருந்து ராஜினாமா செய்யும் வரை அங்கத்தவராக இருந்து வந்திருக்கிறார்

### ராஜ்யசபை அனுதாபம்

ராஜ்யசபையில் இன்று திருமதி ஆல்வாவின்மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கப்சடடது. தலைவர் திரு. பாட்டக் பேசுகையில் திருமதி ஆல்வா நாட்டுக்கு மிக சிறந்தசேவையாற்றிவந்திருக்கிறார் என்றும், வெள்ளையனே வெளியேறு என்ற போராட்டம் முதற்கொண்டு அவரது சேவை நாட்டுக்கு கிடைத்திருக்கிறது என்றும் குறிப்பிட்டார் திருமதிஆல்வா ஐ. நா சபையில் இந்தியாவின் தூதராகவிருந்திருக்கிறார். வெளிநாடுகளில் அவர் பலதடவைகள் இந்திய ஆட்சிமன்றப் பிரதிநியாகப் போயிருக்கிறார்.

### லோக்சபை அஞ்சலி

லோக்சபையில் திருமதி ஆல்லாவின் மறைவுக்கு பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தி அஞ்சலி தெரிவித்து பேசுகையில் திருமதி ஆல்வாவின் மரணச்செய்தி தமக்கு பெரிதும் அதிர்ச்சி யளிப்பதாக விருந்தது என்றார். பாரதப் பெண்களின் உயர் பிரதிநிதியாக அவர் விளங்கினார் என்றார் பிரதமர் திருவாளர்கள், இரா செழியன், ஏ.கே.கோபாலன், போன்ற மற்றும் பலர் பேசினார்கள்.

மரணச் செய்தி கிடைத்ததும் ஜனாதிபதி திரு. கிரியின் காரியதரிசி உடனடியாக திருமதி ஆல்வாவின் இல்லத்துக்குப் போய் அனுதாபம் தெரிவித்தார். திரு. கிரி தற்பொழுது தலைநகரில் இல்லை

### என்பிணத்திலும்...

1 பக்கத் தொடர்ச்சி)

விலைச் சேர்ந்த சின்னத்தம்பி சுப்பிரமணியம் என்பவர் நச்சுத் திராவகம் அருந்தித் தனது இறுதி யாத்திரையைத் தொடர்ந்துவிட்ட ஒரு பரிதாப சம்பவம் இங்கு நிகழ்ந்துள்ளது.

மரண விசாரணையின் போது இறந்தவரின் கையால் எழுதப்பட்டதாகக் கூறப்படும் நீண்ட கடிதக் கட்டொன்று திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு எஸ்.கே. திரவியநாயகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இறந்தவரான சின்னத்தம்பி சுப்பிரமணியம், தான் தனது மனைவியான பவளராணியை மணம் முடித்த நாளிலிருந்து தான் தனது சாவை அணைத்துக்கொள்ளும் நாள் வரை நிகழ்ந்த தனது மணவாழ்க்கை சம்பந்தமான சகல விஷயங்களையும் கதைபோன்று கடிதத்தில் எழுதியிருந்தார்.

தனது மனைவியின் துர்நடத்தைகளைப் பற்றியும், அவளின் கடைசிப் பிள்ளையான ஏழாவது குழந்தை தன்னுடையதல்ல என்றும், ஆனால் 7 பிள்ளைகளுக்கும் படி கட்டும்படி தன்மீது வழக்குத் தாக்கல் செய்திருப்பதாயும் கோர்ட்டிலேறி இதுபற்றித் தலை நிமிர்ந்து கூற முடியாத நிலையில் என்றுமே சாராயம் குடித்துப் பழக்கமில்லாத தான் சாராயத்தைக் குடித்து போதை உண்டாக்கி தைரியத்தை வரவழைத்துக்கொண்டு நச்சுத்திராவகம் அருந்தி தனது உயிரை விடுவதாகவும் மனைவி தனது பிணத்திலும் விழிக்கக்கூடாது என்றும் கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. திடீர் மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

பற்றிய நம்பிக்கையிருந்தால் அந்த ஒன்றரை மணி நேரமும் வேறு ஒன்றும் செய்யாமல் தெய்வபிரார்த்தனையில் ஈடுபட்டிருப்பதே

செழுமலரிட்டு முடி தாழ்த்தடி வணங்கும், நந்திக்கு முந்துறவாட் செய்கிலா விட்ட நன்னெஞ்சமே.

— அப்பர் அடிகள்

## பூநகரி - மன்னார் பஸ் சேவை ஸ்தம்பிதம்

### பெருமழையினால் மக்கள் அவதி

பூநகரி, வியாழன்

பூநகரிப்பகுதியில் கடந்த மூன்று தினங்களாக இடைவிடாது பெய்யும் மழையினால்பெருவெள்ளம் ஏற்படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. தாழ்ந்த பகுதிகளில் இப்போதே வீடுகளெல்லாம் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளது. இதனால் மக்கள் பெரிதும் அச்சமடைந்துள்ளனர். குளங்கள் எல்லாம் உடைப்பெடுத்து நெல் வயல்களெல்லாம் ஒரே வெள்ளக்கடாகக் காட்சியளிக்கின்றது. ஆறுகள் வீதியை மேவிப் பாய்வதாலும் மதகுகள் உடைந்துள்ளதாலும் பூநகரி - மன்னார் பஸ்சேவை முற்றாக ஸ்தம்பித்துள்ளது இதனால் மக்கள் மிகவும் கஷ்டமுற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கடு மழையினாலும் காற்றாலும் தந்திக்கம்பிகள் பழுதடைந்ததினால் தந்திச் சேவையும் ஸ்தம்பித்து மக்கள் கஷ்டமுறும் நிலை ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து மேலும் இரு தினங்களுக்கு மழை பெய்யுமானால் அநேக குடும்பங்கள் குடி பெயர வேண்டிய நிலை ஏற்படலாம்.

## வற்றுப்பளை கோவிலில் திருட்டு

முல்லைத்தீவு, வியா.

முல்லைத்தீவு வற்றுப் பளை அம்மன் கோவிலுள் புகுந்து அம்மனின் கழுத்திலிருந்த தங்கமாலையைக் களவாடியதாகச் சந்தேகத்தின் பேரில் ஒருவர் பொலிஸாரால்கைது செய்யப்பட்டார்.

தங்கமாலையைத் திருடிக்கொண்டுசந்தேகநபர்கோவிலுக்கு அருகிலுள்ள மடத்தில்படுத்து ஆழ்ந்த உறக்கத்திலிருந்ததாகக் கூறப்படுகிறது.

சந்தேகநபரான தண்ணீரூற்றைச் சேர்ந்த முருகேசு பரமானந்தம் (18) என்பவர் முல்லைத்தீவு மேலதிகநீதிபதி ஜனாப் ஏ. ஐ. எம். சகீட் முன்னிலையில் முல்லைத்தீவுப் பொலிஸாரால் ஆஜர்செய்யப்பட்டார். இம்மாதம் 24-ம் திகதிவரை சந்தேக நபரை றிமாண்டில்வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

மட்டக்களப்பில்

## கவியரங்கு

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை சாகித்திய மண்டலம் இக்காலத்தமிழ் கவிதைக்குழு நடாத்தும் கவிதைாற்றிய கருத்தரங்கும் ஏழாவது கவியரங்கும் மட்டக்களப்பு கோட்டை முனை மகாவித்தியாலய மண்டபத்தில் நாளை நடைபெறவிருக்கின்றன காலை 9 மணிக்கு வித்தியாரத்தினம் நவாலியூர் சோ. நடராசன் தலைமையில் வித்துவான் க. செபரத்தினத்தின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும். கவிதை பற்றிய கருத்தரங்கில் பண்டிதர் அ. சபாபதி, புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை பண்டித வித்துவான் வி.சி. கந்தையா திரு. உருத்திரமூர்த்தி (மஹாகவி) ஆகியோர்உரையாற்றுகின்றனர் பிற்பகல் 3 மணிக்கு இதே மண்டபத்தில் நடைபெறும் கவியரங்கில் திருவாளர்கள் மு. சோமசுந்தரம்பிள்ளை, சி. என். சின்னத்துரை (நீலாவணன்), சி. கிருஷ்ணபிள்ளை (திமிலைத்துமிலன்), சிவ. சோமசுந்தரம், வி கி. இராஜதுரை (இராஜபாரதி) சி. மௌனகுரு, மா. சோதிலிங்கம், ஜீவா. ஜீவரத்தினம், அ. அந்தோனிமுத்து (முத்தழகு) அல்ஹாஜ் அ.மு ஸரிபுத்தீன் ஜருப்புகள் எம். எம். ஸாலிஹ் (புரட்சிக்கமால்) எம். ஏ. நுஃமான், யு. எல்தாவுத் நாகூர் ஏ. பாவா ஆகியோர் பங்கு பற்றுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org